PUBLIC LIBRARY JAFFNA

# "ஜனநாயக அமைப்புக்கு அச்சுறுத்தலாக வடபகுதி!"

**- ஜனாதிபதி**

[கொழும்பு]

''1931-ம் ஆண்டு இலங்கை சர்வஜன வாக்குரிமையைப் பெற்றது. அதிலிருந்து ஜனநாயக பாரம்பரியங்களுக்கமையவே ஆட்சிகள் நடைபெற்று வருகின்றன. மக்களும் ஜனநாயக அடிப்படையிலேயே வாழ்க்கை நடத்துகின்றனர். ஆனால் வடக்கில் இருந்து வரும் பயங்கரவாதம் மட்டுமே இந்த நாட்டின் ஜனநாயக அமைப்புக்கு அச்சுறுத்தலாக-இடைக்கல்லாக இருந்து வருகின்றது''

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன பொதுநலவாய அமைப்பு நாடுகளின் நீதியமைச்சர்கள் மகாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்,

இம்மகாநாடு நேற்றுக் காலை பத்து மணியளவில் பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. ஜன [8-ம் பக்கம் பார்க்க]

★ விலை ரூபா 1-00

ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மாசி 3 ஐ. அவ். 1 இதழ் 5

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 15-2-83

தமிழ் ஒலி
வானொலி நேயர் சஞ்சிகை
இ.ஒ.கூ. நிகழ்ச்சிநிரல் உட்பட வானொலி, தொலைக்காட்சி பற்றிய கட்டுரைகள்.
யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலை மற்றும் பிரபல பத்திரிகை விற்பனையாளர்களிடம்
விநியோகஸ்தர்:
Maxs Distributors
20, ஜுபிலி பஸார், யாழ்ப்பாணம்.
6197)

## ● கோலாலம்பூரிலிருந்து கொழும்பு திரும்பிய உபாலி சென்ற விமானம் நீரில் மூழ்கியதா?

## விமானத்தில் பிரயாணம்செய்த 6பேரின் கதிபற்றி தகவலில்லை

(கொழும்பு)

கோடீஸ்வரரும், இலங்கையின் பிரபல தொழிலதிபருமான திரு. உபாலி விஜேவர்த்தன (46 வயது) பிரயாணம்செய்த அவரது சொந்த 'ஜெட்' விமானம், காணமற்போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவின்மலாக்கா நீரிணைப்பகுதியில் நேற்று முன்தினம் காணமற்போன இந்த விமானத்தில் விமான ஓட்டிகள் இருவருடனும், சிப்பந்தி ஒருவருடனும், திரு. உபாலி உட்பட ஆறுபேர் பயணஞ் செய்த அந்த 'ஜெட்' விமானம் காணமல் போனதாக கூறப்படுவதுடன் மலாக்கா நீரிணைப் பகுதியில் தீவிர தேடுதல்களும் இடம்பெற்று வருகின்றன.

சிங்கப்பூரிலிருந்து சனிக்கிழமை இரவு எண்ணெய் நிரப்பப்பட்டு, இயந்திரங்கள் சரிபார்க்கப்பட்ட நிலையில் அந்த ஜெட்விமானம் மலேசியாவின் கோலாலம்பூர் விமான நிலையம் வந்தது. பின்னர் அங்கிருந்து நேற்று முன்தினம் மாலை கொழும்பு நோக்கி அவ்விமானம் பயணத்தை ஆரம்பித்தது.

காப்டன் நோயல் ஆனந்தப்பா என்ற தமிழர் பிரதான விமான ஓட்டியாக அந்த ஜெட்டை செலுத்தி வந்துள்ளார். இவருக்கு அனுசரணையாக சிட்னி சொய்ஸா என்ற விமான ஓட்டியும் கடமையாற்றினர், இவர்களுடன் ஏ. சேனநாயக்கா என்ற சிப்பந்தியும் அந்த விமானத்தில் இருந்துள்ளார்,

திரு. உபாலி விஜேவர்த்தனவுடன் அவரது இயக்குநர்களில் ஒருவரான ஆனந்த பெலி முஹாந்திரம் என்பவரும், மலேசிய நாட்டவரான எஸ். எம். ரத்தினம் என்பவரும் அந்த 'ஜெட்டில் பயணஞ் செய்துவந்தனர்.

இந்தோனேஷியாவிலிருந்து கிடைத்த தகவல்களின்படி, திரு உபாலி பயணம் செய்த விமானம் சுமித்ரா தீவிலுள்ள மேடன் விமான நிலையத்துடனேயே கோலாலம்பூரிலிருந்து புறப்பட்டதும் தொடர்பு கொள்ளவேண்டியிருந்தது மேடன் விமானநிலையத்துடன் அந்த ஜெட்விமானம் கோலாலம்பூரிலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் தொடர்புகளைத் துண்டித்துள்ளது இதனையடுத்தே மலேஷியா, இந்தோனேஷிய விமானநிலைய வட்டாரங்கள் அந்த விமானம் [8-ம் பக்கம் பார்க்க]

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி விமானம் நீரில் மூழ்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. விமானத்தைத் தேடும் முயற்சி நேற்று மாலை கைவிடப்பட்ட போதிலும் இன்று காலை தொடர்ந்து நடைபெறும் என்று கடைசியாகக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபை தலைமைச் செயலகத்தில் இழுக்கப்பட்ட 920-வது துலக்க சுவீப் முடிவுகள்.

1-ம் பரிசு

**09 L 0807**

ரூபா 2,00,000

2-ம் பரிசு

**18 T 0997**

ரூபா 75,000

3-ம் பரிசு

**15 W 0234**

ரூபா 25,000

[8-ம் பக்கம் பார்க்க]

## வவனியா உண்ணாவிரதம்: 9 பேர் ஆஜர்

[வவனியா]

இறம்பைக் குளம் அந்தோனியார் ஆலயத்தில் வவனியா உண்ணாவிரத போராட்டம் தொடர்பாக கைதான 9 பேரும் நேற்று வவனியா மாவட்ட பதில் நீதிபதி திரு. ஆர் வி. விக்வராஜா முன்னிலையில் ஆஜரானர்கள்.

இவர்கள் சார்பில் சட்டத்தரணியும், மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவருமான திரு. எம். சிற்றம்பலம் ஆஜரானர்.

இவ்வழக்கின் சந்தேகநபர்களான டாக்டர் ராசசுந்தரம், டாக்டர் பெர்ணண்டோ திரு. எம். எஸ். கந்தையா, திரு ஈழவேந்தன், திரு கருணாநிதி, திரு ரவிக்குமார், திரு. வாசுதேவா, திரு. இன்பசிமுத்து, திரு டேவிட் நாகநாதன் ஆகிய 9 பேரும் நீதிமன்றத்தில் ஆஜரானர்கள்.

நீதிபதி வழக்கை ஜூன் மாதம் 6-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## கொழும்பு - காங்கேசன்துறை துரித ரயில் சேவை நாளை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

நகரங்களுக்கிடையே நடைபெறும் துரித கடுகதி ரயில் சேவை [இன்ரர் சிற்றி எக்ஸ்பிரஸ்] நாளை கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கு மிடையே ஆரம்பமாகிறது

பரீட்சார்த்தமாக நாளை ஆரம்பமாகும் இத்துரித கடுகதி ரயில் சேவை முதலில் வாரத்தில் மூன்று தினங்கள் நடைபெறும்.

கொழும்புக்கும் காங்கேசன் துறைக்குமிடையே இந்தரயில் இரண்டு இடங்களில் மட்டுமே தரித்துச் செல்லும்.

நாளைக் காலை கொழும்பிலிருந்து 5-45க்கு புறப்படும் துரித கடுகதி ரயில் அனுராதபுரத்துக்கு காலை 9 மணிக்கு வந்துசேரும். இதன் அடுத்த தரிப்பு நிலையமான யாழ்ப்பாணத்தை பகல் 12மணிக்கு அடையும். காங்கேசன் துறையை நண்பகல் 12-20க்கு போய்ச்சேரும்.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு புறப்படும் ரயில் நேர விபரம் !

[8-ம் பக்கம் பார்க்க]



## இராதாகிருஷ்ணன் யாழ். வருகிறார் !

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகத்தின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக பேராசிரியர் [8-ம் பக்கம் பார்க்க]

## கோர லொறி விபத்தில் மூவர்பலி! வவனியாவில் சம்பவம்

(வவனியா)

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச்சென்று கொண்டிருந்த சரக்கேற்றிய லொறியொன்று வவனியாவிலிருந்து சுமார் ஒன்றரைமைல் தூரத்தில் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் பலியாகியுள்ளனர்.

காங்கேசன் துறையைச் சேர்ந்த இந்த லொறி தக்காளி பழங்களையும், வெங்காயமூடைகளையும் ஏற்றிக்கொண்டு கொழும்புக்குச் சென்று கொண்டிருக்கும்போது வவனியா கண்டிவீதியில் மூன்று முறிப்பு என்ற இடத்தில் இந்த விபத்து ஏற்பட்டுள்

[8-ம் பக்கம் பார்க்க]

# "அரசியலிலும், பொதுவாழ்விலும் தமிழ்ப் பெண்கள் ஈடுபட்டு உழைக்க முன்வர வேண்டும்"

## பாராட்டு விழாவில் 'அமிர்'

(பண்டத்தரிப்பு)

அரசியலிலும், சமூகசேவையிலும் கணிசமான அளவு சிங்களப் பெண்கள் தென்னிலங்கையில் ஈடுபட்டு வருகின்றனர். எமது தமிழ் சமூகத்தில் பெண்கள் இவற்றிலிருந்து ஒதுங்கிவாழ்வதைக்காணக் கூடியதாக இருக்கின்றது. கடந்த 30 ஆண்டுகளாக சமூக சேவையில் ஆர்வமுடன் ஈடுபட்டுவரும் திருமதிபேளிஅத்தஞசியார் இன்று கிராமோதய சபைத் தலைவியாகவும், பிரதேச சபைத் தலைவியாகவும் தெரிவுசெய்யப்பட்டு ஏனைய தமிழ்ப் பெண்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்து வருகின்ருர்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பண்டத்தரிப்பு கிராமோதயசபைத் தலைவியாகவும், வலி தென்மேற்கு பிரதேச சபைத்தலைவியாகவும், தெரிவு செய்யப்பட்டுள்ள வைத்திய கலாநிதி திருமதி பேளி அத்தஞசியாருக்கு பண்டத்தரிப்பு பரீஷ் பொதுமக்கள் சார்பில் அளிக்கப்பட்ட பாராட்டுவிழாவில் பிரதம அதிதியாககலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இளைப்பாறிய பாடசாலை அதிபர் திரு. வி. செல்லத்துரை தலைமையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது. திரு. அமிர்தலிங்கம் அங்குதொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

சமூகசேவையிலும் பொது சேவையிலும் தீவிரமாக ஈடுபட்டுவரும் பெண்கள் எமது இனத்திற்கு இன்று அதிகம் தேவைப்படுகின்றனர்.

பொத்துவில் தொகுதி பாராளுமன்றப் பிரதிநிதியாக விளங்கும் திருமதி ரங்கநாயகி பத்மநாதன் கூட மக்களால் தெரிவுசெய்யப்படாது அரசினால் நியமிக்கப்பட்ட ஒரு தமிழ்ப் பெண் பிரதிநிதியாகவே இருக்கிருர். எமது தமிழ்ப்பெண்கள் தமது இனத்திற்கான தங்கள் பங்களிப்பை செலுத்தவேண்டும். அரசியலிலும் பொதுவாழ்விலும் தீவிரமாக ஈடுபட்டு உழைக்க அவர்கள் முன்வரவேண்டும்.''

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா உரையாற்றுகையில் கூறியதாவது:

அரசாங்கம் கிராமோதய சபைகளுக்கு மேலும் பல அதிகாரங்களையும், நிதி வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இந்நிலையில் இச் சபைகளின் பொறுப்புகள் எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்று கருதுகின்றேன் திருமதி பேளி அத்தஞசியார் போன்ற அனுபவமும், ஆற்றலும் மிக்க தலைவர்களின் தலைமையில் இது போன்ற சபைகள் சிறந்த பணிகளை ஆற்றக்கூடியதாக இருக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.''

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. சு. நடராசா கோப்பாய்த்தொகுதி எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் திரு. ச. பூபாலசிங்கம், திரு. சு. நடேசு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. க. அருணாசலம், மாதகல் கிராமோதய சபைத் தலைவர் திரு. மு. பாலசிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இவ்விழாவில் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கினூர்கள். பாராட்டுப்பத்திரம் ஒன்றும் பண்டத்தரிப்பு பொதுமக்கள் சார்பில் வாசித்து வழங்கப்பட்டது. இறுதியில் விழாக்குழுச் செயலாளர் திரு. சி. நடராஜா நன்றியுரை நிகழ்த்தினூர். (க)

# பிரயாணிகள் புகார்

(கரவெட்டி)

பருத்தித்துறை இ. போ. ச சாலையினுல் நெல்லியடி ஊடாக நடத்தப்படும் பஸ்சேவைகள் காலைவேளையில் சீராக நடைபெறுவதில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

இச்சேவையில் ஈடுபடும் பஸ் வண்டிகள் அடிக்கடி தாமதமாகவும், சேவையில் ஈடுபடாமலும் இருப்பதாக பிரயாணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

காலைவேளையில் சீர்கேடான நிலையில் இப்பஸ்சேவை நடைபெறுவதால் அரசாங்க உத்தியோகத்தர்கள் உரிய நேரத்திற்கு போக முடியவில்லை.

# 10 வருடங்களாக ஆங்கில ஆசிரியர் இல்லையாம்!

[புலோலி]

குடத்தனை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த 10 வருடங்களாக ஆங்கில ஆசிரியர் இல்லாதிருப்பதனுல் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள்

(7-ம் பக்கம் பார்க்க)


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய நாஷனல் வீடியோ 'டெக்' Two-In-One, புகைப் படக்கமிரா என்பனவிற்பனைக்குண்டு. தேவச்சந்திரன், 77, பாரதிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 6167

கிணறு மற்றும் வசதிகளுடன் புதிய வீடு [மூன்று அறைகள் கொண்டது] 2 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ. மாமகேசன். ஆறுமுகம் ஒழுங்கை, 3-ம் கட்டை, கல்வியன்காடு. 6187

## தவறிவிட்டது

சின்னத்துரை பாலச்சந்திரன் பெயரிலுள்ள பஸ் லைசென்சும், கந்தசாமி அரியரத்தினம் பெயரிலுள்ள மோட்டார் சைக்கிளுக்குரிய காப்புறுதிப் பத்திரமும் (11-2-83) வெள்ளிக்கிழமை காலை யாழ். அரசடி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து 125, சிவன் கோவில் வடக்கு வீதியிலுள்ள "சங்கர் ரவல்ஸ் சேவிஸ்" காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [6191]

அம்பாள் சமூக சேவா கலா மன்றம்
வலந்தலை, காரைநகர்
13-2-83 அதிர்ஷ்டம் பார்க்க இருந்த ரிக்கட் 13-4-83க்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்ருேம்.
நிர்வாகிகள்
[6192]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## உடன் கார் தேவை

சொந்தக்காரரிடமிருந்து 1983-ம் ஆண்டு லைசன்ஸ்சுடன்
1. மைனர் 1000
2. வோர்க்ஸ் வகன் (Padded Steering)
3. பேர்ஜோ 404 (Full Safari)

விபரங்களுக்கு:
யாழ். பிறப்பட்டி ரேட்ஸ் லிமிற்.
3,, நவீன சந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
போன்: 23698

## கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்ட பொருட்களுக்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
முடிவுத் திகதி 21-02-83 முற்பகல் 12-00 மணிக்கு
விண்ணப்பப் பத்திரங்களுக்கும் விபரங்களுக்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொருட்களின் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் | 4037 |
| 2. | 8 25 — 20 லொறி ரயர் பழையது | 08 |
| 3. | 900 — 20 லொறி ரயர் பழையது | 04 |
| 4. | லொறி ரிம் (பழுது) | 04 |

பொதுமுகாமையாளர்,
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
1983-02-14. (6193)


# "தமிழீழ விடுதலைப் பயணம் மக்கள் சக்தியாக மாற வேண்டும்!"

[மாவிட்டபுரம்]

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதுமட்டும் எமக்குள்ள பிரச்னை அல்ல. இந்தச் சட்டம் நீக்கப்பட்டாலும் இதேபோன்ற கொடுமையான சட்டங்கள் வரலாம் ஆகவே அடிப்படைப் பிரச்னைகள் தீரும் வரை எமது நடவடிக்கைகள் ஓயக்கூடாது. பொலிஸ் இராணுவ ஆக்கிரமிப்பு நீங்கி நாம் சுதந்திரமாக வாழக்கூடிய நிலையை ஏற்படுத்த உழைக்க வேண்டும்''

இவ்வாறு மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் முன்றலில் இடம்பெற்ற மாணவர்களது உண்ணாவிரதத்தில் கலந்துரையாற்றிய கோவை மகேசன் கூறிஞர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''பயங்கரவாத தடைச் சட்டம் 1979ம் ஆண்டு கொண்டு வரப்பட்டாலும் இன்றுதான் அதனை எதிர்த்து இயக்கம் முனைப்புபெற்றுள்ளது. சட்டம் கொண்டுவரப்பட்ட காலகட்டத்தில் இன்பம், செல்வம் ஆகியோர் கொலைசெய்யப்பட்டதை நாம் மறந்துவிடக் கூடாது இன்றும் பொலிசாரால் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணுமல் போனவர்கள் எத்தனைபேர் என்பது தெரியவில்லை. இன்று சட்டம் என்று ஒன்றில்லாமல் படைகளது அட்டூழியமே நடைபெறுகிறது.

''இந்நிலையில் சுதந்திர ஈழத்தை அடைவதற்கான பாதையில் நாம்முன்னேற வேண்டும். அப்பாதையில் இந்த உண்ணாவிரதம் ஒருகட்டமாகும். மற்றும் பலவகைகளிலும் இயங்கவேண்டும். இதற்கு மக்கள் பார்வையாளர்களாக இல்லாமல் பங்காளர்களாகமாறவேண்டும்''

திரு. ஈழவேந்தன் பேசுகையில் கூறியதாவது;

தமிழீழ விடுதலைப் பயணம் மக்கள் சக்தியாக மாறவேண்டியதவசியம் குழப்பமடையும் தலைவர்களை நம்பி மக்களும் குழப்பமடையாமல் ஒவ்வொரு தமிழ்மகனும் இதற்காக உழைக்கவேண்டும்.

## பாண்நிறை குறைவு: பாவனையாளர்கள் புகார்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள சில பேக்கறிகளில் உற்பத்திசெய்து விற்பனைக்கு விடப்படும் பாண் நிறை குறைந்து காணப்படுவதாக பாவனையாளர்கள் யாழ் உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு புகார்செய்துள்ளனர்.

பண்டத்தரிப்பு சந்தைக் கட்டிடத்திலுள்ள கடையொன்றில் நேற்று 'றேஸ்' பாண் வாங்கிய ஒருவர் அதை நிறுத்துப்பார்த்தபோது மூன்று அவுன்ஸ் அதன் குறிப்பிட்ட நிறையிலும் பார்க்க குறைந்திருந்ததால் இதுபற்றி பண்டத்தரிப்பு பாவனையாளர் சங்கத்திற்கு அவர் முறைப்பாடு செய்துள்ளார். (க)

## வருடாந்த மகோற்சவம்

(பண்டத்தரிப்பு)

சரித்திரப் பிரசித்திபெற்ற கீரிமலை அருள்மிகு நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்தமாதம் 9ம் திகதியன்று கைலாசவாகன உற்சவமும், 11ம் திகதி வெள்ளிக்கிழமையன்று சப்பறத்திருவிழாவும், 12ம் திகதி சனிக்கிழமை சிவராத்திரி தினத்தன்று தேர் உற்சவமும், 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

ஆலய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். (க)

## 'திரிபோஷ' மா விநியோகம் நிறுத்தப்பட்டதால் நோயாளர் பாதிப்பு!

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் காட்டுப்புலம் கிராமத்திலுள்ள தொழுநோயாளர்களுக்குத் தொல்புரம் அரசினர் வைத்திய சாலையில் தொழுநோய் சிகிச்சை 'கிளினிக்' கில் வைத்து வழங்கப்பட்டுவந்த ''திரிபோஷ'' மா விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதால் இந்நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சர்வோதய இயக்கத்தின் சார்பில் இலவசமாக வழங்கப்பட்டுவந்த இந்த சத்துமிக்க ''திரிபோஷ'' மாவை 'கிளினிக்கில்' இருந்து வாங்கிச் சென்ற நோயாளர்களில் ஒருவர் அதை வெளியாருக்கு விலைக்கு விற்றதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து மேற்படி சிகிச்சை நிலையத்தில் ஏனைய தொழு நோயாளர்களுக்கு வழங்கப்படாத விதத்தில் இந்த மா விநியோகம் முற்ருக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக இதுபற்றித் தெரிவிக்கப்படுகின்றது.

ஏழைகளான இந்த நோயாளர்களின் நலன்கருதி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ''திரிபோஷ'' மா விநியோகத்தை மீண்டும் ஆரம்பித்து உதவுமாறு சுழிபுரம் பொதுசுகாதாரப் பரிசோதகர் திரு ஏ. ஜே. நாகலிங்கம் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளார். (க)

## மருந்து தட்டுப்பாடு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. காய்ச்சலுக்கு பாவிக்கப்படும் 'அஸ்பிறின்' மாத்திரைகள் உட்பட முக்கிய மருந்துவகைகளுக்கு இவ்வைத்தியசாலையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஜி. பத்மஜெயன் வைத்தியசாலைக்கு அவசியம் தேவையான மருந்துகளை விரைவில் அனுப்பிவைக்குமாறு மேலிடத்தைக் கடித மூலம் கேட்டுள்ளார். [க]

# அஸாம் கலவரங்களில் இதுவரை

# 70 பேர் படுகொலை!

## ஞாயிறுகலகத்தில்4பேர்பலி!

புதுடில்லி, பெப் 14

அஸாம் மாநிலத்தின் தலைநகரான கோஹாட்டியிலிருந்து 46 மைல் தொலையில் உள்ள போஹோ பகுதியில் நேற்று ஞாயிறு ஏற்பட்ட வகுப்புக்கலவரத்தில் 6 பேர் கொலைசெய்யப்பட்டனர். இவர்களில் மூவர் கிறிஸ்தவர்களாகும்.

இக்கலவரம் அஸாமியர்கள் பெரும்பான்மையினராக வாழும் சமாறியா கிராமத்திலேயே ஏற்பட்டுள்ளது. கோடரிகள், கத்திகள், கம்புகள் பெருமளவு கலகக்காரர்கள் கிராமத்தில் புகுந்து தாக்குதல்களை நடத்தியதாக பொலிஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று திங்கள் ஆரம்பித்துள்ள தேர்தலை ஆட்சேபித்து அஸாமியர்களில் ஒரு பகுதியினர் கிளர்ச்சி, தேர்தல்பகிஷ்கரிப்புகளை நடத்திவருகின்றனர். 1950 முதல் அஸாமில் பிறர் வந்து குடியேறுவதினால் அஸாமியர்கள் பின்தள்ளப் படுவார்கள் என்பது கிளர்ச்சி, பகிஷ்கரிப்பு குழுவினரின் கோரிக்கை.

அஸாமில் தற்போது 10 லட்சம் வெளியார்கள் வசிப்பதாக மத்திய அரசும் அஸாம்மாநில அரசும் கூறுகின்றன. வன்செயல்களில் தேர்தல் வேட்பாளர், வேட்பாளரின் ஆதரவாளர்களை கடத்திச்செல்லல், தீவைப்பு, கொலை செய்தல், கோஷ்டி கோஷ்டியாக தாக்குதல்கள் போன்றவை முக்கியமாக இடம்பெற்று வருவதாகவும், பாதுகாப்பினைப் பலப்படுத்தவும் அமைதியை ஏற்படுத்தவும் பாரத இராணுவப்படை, பொலிஸ் படையினர் அஸாம் மாநிலத்துக்கு பெருமளவில் அனுப்பி உள்ளதாகவும் உள்துறை அமைச்சின் செயலகம் இன்று காலை அறிவித்துள்ளது. கடந்த பத்து நாட்களில் மட்டும் 70 பேர் வன்செயல்களினால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். (உ)

### கடல்வள ஆராய்ச்சிக்கு நவீன கப்பல்

புதுடில்லி, பெப். 14

கடற்படுக்கையின் ஆய்வு வேலைகளுக்கான நவீன கப்பல் ஒன்றை பாரதம் வாங்கியுள்ளது.

ஒன்றரைக் கோடி டாலர் பெறுமதியான இக்கப்பல் ஏப்ரல் மாதமளவில் பாரதம் வந்துசேரும் என்று பாரத கடற்றொழில் மத்திய கார்ப்பரேஷன் தலைவர் காஸிம் தெரிவித்தார்.

இந்த நவீன ஆய்வுக்கப்பலை அமெரிக்க அரசிடமிருந்து பாரதம் கொள்வனவு செய்தது. (உ)

### மாவட்ட நீதிபதியாக பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் நீதிமன்ற நீதவானாகக் கடமையாற்றிய திரு. வி. ஜெகசோதி இன்று யாழ். மேலதிக மாவட்ட நீதிபதியாகப் பதவி உயர்வுபெற்றுள்ளார்.

# அஸாம் மாநில வாக்குப்பதிவு நேற்று ஆரம்பம்!

## 20-ம் திகதி இறுதிக்கட்ட வாக்களிப்பு

புதுடில்லி, பெப். 14

அஸாம் மாநில சட்டமன்றத்தினதும், லோக்சபாவினதும் பொதுத் தேர்தல் வாக்குப் பதிவு இன்று காலைமுதல் ஆரம்பமாயிற்று

126 உறுப்பினர்களைக் கொண்ட அஸாம்மாநில சட்டமன்றத்தில் 62 உறுப்பினர்களைத் தெரிவுசெய்யவும், லோக்சபாவுக்கு 12 உறுப்பினர்களைத் தெரிவுசெய்யவும் வாக்குப் பதிவு நடைபெறுகிறது. 1ம் கட்ட வாக்குப் பதிவு இன்று திங்களும் 2ம் கட்ட வாக்குப்பதிவு நாளை மறுதினம் வியாழனும், இறுதிக்கட்ட வாக்குப் பதிவு எதிர்வரும் 20ந் திகதி ஞாயிறும் நடைபெறும்.

இம்மாதம் 21ந் திகதி வாக்குகள் எண்ணும் வேலைகள் ஆரம்பமாகும். வாக்குப் பதிவு நடைபெறுவதற்கு முன் வேட்புமனுத் தாக்கல் மூலம் சட்டமன்றத்துக்கு ஒரு உறுப்பினர் தெரிவாகியுள்ளார். மிகுதி 61 உறுப்பினர்களின் தெரிவிற்கே தேர்தல் நடைபெறுகிறது.

மாநில அரச தேர்தல் வேலைகள் சுமுகமாகவும் நீதியாகவும் நடைபெறும் வகையில் விரிவான பாதுகாப்புச் சேவை அமைந்துள்ளது. வாக்காளர் அச்சமோ, பயமோ இன்றி அமைதியாக தமது வாக்குகளைப் பதிவுசெய்வதற்கு உரிய சகல பாதுகாப்பு ஏற்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அஸாம் மாநில ஆளுநர் பிரகாஸ் மெகோதரா இன்று காலை அறிவித்தார்.

அஸாம் மாநில ஆளுநர் பிரகாஸ் மெகோதரா வாக்காளருக்கு விடுத்துள்ள கோரிக்கையில்; அமைதியாகவும் நியாயமாகவும் வாக்களித்து சுமுகமான தேர்தல் மூலம் தமது ஜனநாயக இறைமையை மக்கள் பிரயோகிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (உ)

### மாஸ்கோவில் நடந்த பாரதி நூற்றுண்டு விழா

மாஸ்கோ, பெப். 14

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூற்றுண்டுவிழா, மாஸ்கோ நட்புறவு மாளிகையில், சோவியத்-இந்திய நட்புறவுச் சங்கத்தின் ஆதரவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சோவியத் அறிஞர்கள் பலரும், சோவியத் யூனியனில் இந்தியத் தூதுவராக உள்ள வி. அஹூஜா, இந்தியாவிலிருந்து 'தேசபந்து' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியரான ஆர். எல். சர்ஜான், பாரதி இலக்கியங்களில் நிபுணரான எஸ். இராமகிருஷ்ணன் ஆகியோரும் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

பாரதி நூற்றுண்டு விழாக் கமிட்டித் தலைவர் திரு. செர்க்பாருஸ்தின் பேசுகையில் "சோவியத் யூனியனில் ஓராண்டுக் காலம் கொண்டாடப்பட்ட பாரதி நூற்றுண்டு விழா இந்தியாவின் அந்த மாகவிக்கு சோவியத் மக்கள் செலுத்திய சிறந்த அஞ்சலியாகும் என்றும் கூறினார்.

சாதி, மத, இன வேற்றுமைகளை எதிர்த்தவர் என்ற முறையில் பாரதியாரை சோவியத் மக்கள் பெரிதும் போற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### "பாக். பாராளுமன்றம் சட்டரீதியற்றது!"

#### ஜனநாயக இயக்கத் தலைவர் கருத்து

பெஷாவார், பெப். 15

"பாகிஸ்தானின் நடைமுறைப் பாராளுமன்றம் ஜனநாயக மரபு சட்டநெறிகளுக்கு அமைந்தது அல்ல. மக்களின் அங்கீகாரம் பெற்றதும் அல்ல. பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய மக்கள் அங்கீகாரம் பெற்ற ஜனநாயக மரபிலமைந்த பாராளுமன்றம் அமைக்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கையிலேயே நாம் முதலில் ஈடுபட்டுள்ளோம்."

மீண்டும் ஜனநாயகத்தை பாகிஸ்தானில் நிலை நிறுத்த அணிதிரண்டுள்ள ஒன்பது கட்சிகளின் "ஜனநாயகம் மீண்டும் நிலைநிறுத்தும் இயக்கம்" என்னும் கூட்டமைப்பின் தலைவர் பெஷாவாரில் நடைபெற்ற இயக்க ஊழியர்கள் தொண்டர்கள் மத்தியில் வைத்து மேற்படி தெரிவித்தார். (உ)

### சனிதோறும் 'ஓம் சாந்தி'ஜெபம்

[யாழ்ப்பாணம்]

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்த மகராஜ் கடந்த மாதம் கொழும்பு வந்த போது விடுத்த வேண்டு

(6-ம் பக்கம் பார்க்க

### ஊர்வலம் மீது துப்பாக்கிப் பிரயோகம்

#### ஒருவர் பலி!

நாகர்கோவில், பெப். 14

தடையுத்தரவை மீறி நாகர்கோவிலில் நேற்று நடத்திய ஊர்வலம் மீது பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். இருவர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்குள்ளானார்கள்.

ஊர்வலத்தைத் தடுத்து கலைந்துபோகுமாறு பொலிஸார் விடுத்த அறிவிப்பை அடுத்து ஊர்வலத்தில் சென்றவர்கள் வன்செயல்களில் ஈடுபட்டனர் என்றும் இதனால் இரு பொலிஸ் உதவி அதிபர்கள், 15 கான்ஸ்டபிள்கள் படுகாயமுற்றனர் என்றும் பொலிஸாரின் குண்டாந்தடிப் பிரயோகத்தால் ஊர்வலத்தில் கலந்து கொண்டோரில் பலர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

நிலைமை கட்டுக்கடங்காது போகவே பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து நிலைமையைக் கட்டுக்கோப்புக்குள் கொண்டு வந்தனர். (உ)

### விபத்தில் சிக்கிய கிளிநொச்சி

# ஐ.தே.க. உறுப்பினருக்கு ஒரு மாதமாகியும் சுயநினைவில்லை

#### சாரதியை மீண்டும் கைதுசெய்ய உத்தரவு

[கிளிநொச்சி]

கார்-சைக்கிள் விபத்தில் சிக்கி அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சித் தொகுதி ஐ. தே. க. கட்சி செயற்குழு உறுப்பினர் ஆறுமுகம் பத்மநாதன் தொடர்ந்தும் சுயநினைவு திரும்பாத நிலையிலேயே இருந்து வருகிறார்.

பிரஸ்தாப நபர் சுமார் ஒரு மாதத்தின் முன்னர் கிளிநொச்சி இலங்கைவங்கியில் இருந்து ஐ. தே. கட்சி அலுவலகத்தை நோக்கி வந்து கொண்டிருந்தபோது பின்னால் வந்த காரினால் மோதுண்டு தலையிலும், காலிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டது. சம்பந்தப்பட்ட காரும் பலத்த சேதத்திற்குள்ளாகியது.

விபத்திற்காளாகிய பத்மநாதன் உடனடியாக கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு முதலுதவி அளிக்கப்பட்டபின் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக மாற்றப்பட்டார்.

யாழ். ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டபோதும் விபத்திற்குள்ளான பத்மநாதனுக்கு இதுவரை

(6ம் பக்கம் பார்க்க)

### இஸ்ரேல் அமைச்சரவையில்

## ஷெரொன் பொறுப்பற்ற அமைச்சரானர்!

டெல் அவிவ், பெப். 14

இஸ்ரேலின் அமைச்சரவை செயலாளரும் இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரான ஏரியல் ஷெரோனைப் பதவிநீக்கம் செய்துள்ளதாக அறிவித்துள்ள அதே நேரத்தில் திரு. ஏரியர் ஷெரொன் இலாகாக்கள் அற்ற அமைச்சராகத் தொடர்ந்து இஸ்ரேலின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளதாகவும், பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பை தற்காலிகமாக பிரதமர் மெனசெம் பெகின் ஏற்றுள்ளதாகவும் அமைச்சரவைச் செயலகம் அறிவித்துள்ளது.

வ்வார இறுதிக்குள் புதிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவு செய்யப்படுவார் எனத்தெரிய வருகிறது. [உ]

# எண்ணெய்க்கிணறு தோண்டும்கப்பல்!

மாஸ்கோ, பெப். 14

கடலில்ஆழம் அதிகமில்லாத கரையோரக் கடல் பகுதிகளில் எண்ணெய்க் கிணறு தோண்டுவதற்கான ஒரு புது மாதிரியான கப்பலை சோவியத் யூனியன் தயாரித்துள்ளது.

30 மீட்டர் ஆழக் கடலில் கூட எண்ணெய்க் கிணறு தோண்டக்கூடிய கப்பல் உலகத்திலேயே இதுதான் முதலாவதாகும். கிணறு தோண்டும் பொழுது கப்பல் அசையாமல் இருக்க இதில் 'கம்பியூட்டர்' மூலம் இயங்கும் பிரத்தியேக சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. [உ]

மணிவாக்கு

உடைமை என்பது கல்வி உடைமை. — பழமொழி

# நமது நோக்கு

## கல்வி விருத்தி

கட்டிட விருத்தியிலும் பார்க்க கல்வி விருத்தியிலே ஒரு பாடசாலை முன்னிற்க வேண்டிய அவசியத்தை யாழ் அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா அண்மையில் நினைவூட்டியிருப்பது கல்வியில் அக்கறை கொண்ட அனைவருக்கும் சிந்தனைக்குரிய விடயமாகும்.

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் நாலரை லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட எட்டு வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடத்தைத் திறந்து வைக்கும் வைபவத்திலேயே இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார் திரு தேவநேசன்.

கல்வி விருத்திக்கு கட்டிடம் அவசியமில்லையென்பது அவருடைய கருத்தல்ல அதேசமயம் கட்டிடவிருத்திக்கும் கல்வி விருத்திக்கும் உள்ள வேறுபாட்டை அவர் மறைமுகமாக உரைத்திருப்பது மிகப்பொருத்தமானது.

அபிவிருத்தி என்றசொல்லிலேயே ஏதோ ஒன்றைக் கட்டி எழுப்பிவிடுவது என்ற எண்ணம் தானகவே உதிக்கின்றகாலம் இக்காலம்.

பாடசாலைகளில் நிலை நெருக்கடி, இடநெருக்கடி அதிகரித்து வருவதால் காணி வாங்குவதும் கட்டிடம் அமைப்பதும் தவிர்க்க முடியாத தேவைகளென்பது தெளிவு.

இவற்றைச் சாமர்த்தியத்துடன் நிறைவேற்றும் செயல்வீரர், இத்துடன் கல்வி தானகவே விருத்தியடையும் என்று நம்பவது இக்கால வழக்கமாகிவிட்டது. கட்டிடத்தையே சாதனையாகக் கொள்ளும் மடைமை மலையேறவேண்டும்.

இதன் போலித்தனத்தை விளக்குவதே இன்றைய ரியூஷன் கடைகள்? காலகதியில் 'ரியூஷன் நவீன சந்தை'யென்ற ஒரு கம்பீர ஸ்தாபனம் உருவாகலாம் போல் தெரிகிறது.

கடந்த காலக் கல்வி முறையில் ஆசிரியர்களே கல்வியின் பிரதம கர்த்தாக்கள்; அவர்களின் தியாக சேவையில் உருவான மாணவர்கள், அம்மாணவர்களின் பெற்றோர்கள் - பாடசாலைச்சமூகம் கொட்டில்களில் - கோவில்களில் என்று சொன்னாலென்ன - நடைபெற்ற கல்வியின் திறமையால் அப்பாடசாலைகளுக்கு மிக வசதியான, அழகான கட்டிடங்கள் அமைத்துக்கொடுத்தனர்.

இன்று இக்கம்பீர கட்டிடங்கள் வெறிச்சோடிக் கிடப்பதைக் காண்கின்றோம். மாணவர்கள் ஆயிரக்கணக்கில் வந்துபோகின்றனர்; வாழ்வைப் போல் சந்தையிற் கூட்டம் அது; ஆசிரியர்கள் பெரும்பாலும் அரசாங்க உத்தியோகத்தர்கள், கல்லூரி அலுவலகம் முக்கியமாகிவிட்டது. ஆனால் வகுப்பறைகளில், விஞ்ஞான ஆய்வுகூடங்களில், பாடசாலை நூல்நிலையத்தில் கல்வி நடைபெறுகின்றதா?

பாடசாலை முடிய மாணவர்கள் 'கல்விக்கடைக்கு'ப் போவது சாதாரணமாகிவிட்டது; அவசியம் போலுமிருக்கிறது; பல இடங்களில் நல்ல 'ரியூஷன்' வகுப்புக்களை நடத்துபவர்கள் பாடசாலை ஆசிரியர்களே! பிரத்தியேகமான வகுப்புக்களை நடத்தும் பிரபல ஆசிரியர்களின் பெயர்களை சினிமா விளம்பரம்போல் நகர், நாடெங்கிலும் காண்கின்றோம்.

எனவே நாட்டின் ஆயிரக்கணக்கான பாடசாலைகளின் கல்வி நிலை என்ன என்பது பகிரங்க விசாரணைக்குரிய விடயமாய் விட்டது.

மத நிறுவனங்கள், தனிப்பெரும் வள்ளல்கள் கடந்த காலத்தில் சிறந்த பாடசாலைகளை நிறுவி நடத்தி வந்தனர். ஆனால் எல்லோருக்கும் படிக்கும் வாய்ப்புக் கிட்டவில்லை.

நாட்டிலுள்ள ஏழைமக்கள் அனைவருக்கும் கல்வி நல்கவல்ல ஒரே ஒரே ஸ்தாபனம் அரசாங்கமே!

அன்னசாலைகள் அமைத்தலும், ஆலயங்கள் எடுத்தலும், சாலைகள் வகுத்தலும், சோலைகள் வளர்த்தலும் சிறந்த அறங்களாகக் கருதப்படுவன. ஆனால் பாரதியார் பாடியதுபோல் அறிவை வளர்க்கும் கல்லூரிகளை நிறுவுதலே தலைசிறந்த அறம்.

பாடசாலைகளைப் பொறுப்பேற்ற அரசு, பல தர்ம நிறுவனங்களின் பணியை-நயபிக்கைச் சொத்தைப் பொறுப்பேற்றது; இலங்கை வரலாற்றில் இதனைவிட மிகப்பொறுப்பான பணி எதுவும் அரசு தன்மேல் எடுத்துக்கொண்டதாகச் சொல்லமுடியாது. இவைசவைத்தியம் இதற்கு இரண்டாவதே!

இந்தப் பாரிய பொறுப்பை அரசு கடந்த 22 ஆண்டுகளாக எவ்வாறு நிர்வகிக்கின்றது?

பொதுமக்கள் திருப்தியற்ற நிலையில் தனியார் பாடசாலைக்குப் படையெடுப்பது இன்றையநிலை.

அரசாங்கப் பாடசாலைகள் என்பதால் அவை உதவாக்கரையெனலாமா? இன்றும் நாட்டின் அரசாங்கப் பாடசாலைகள் சில இலைமறைகாய் போல் துரிதமாக வளருகின்றன.

எனவே எது முக்கியம்? அதிபர்-ஆசிரியர்-மாணவர் தொடர்பு ஒழுக்க அடிப்படையில் செயல்படுமாயின் அப்பாடசாலை உயிரினை வளர்க்கும் அறிவுச்சாலையாக விளங்கமுடியும். இக்கருத்தை வற்புறுத்துவது எமது அவசிய கடமை.

கல்வி நலம் அறியாது வருந்தும் பல்லாயிரக்கணக்கானோர்க்கு பாடசாலைகள் அமைத்தல் நல்லரசின் கடமையாகும்; அப்பாடசாலைகளில் கல்வி ஒளி விளங்கச் செய்யும் ஆசிரிய சமுதாயம் வளம்பெறச்செய்யும் வகையில், கல்வி அமைச்சு அரசியல் வாதிகளின் தலையீடற்ற தூய நிர்வாக முறையைப் புனரமைப்புச் செய்தல் அதிமுக்கிய, அவசர பணியாகும்.

---

கரவெட்டி, கரணவாய், துன்னாலை, நெல்லியடி, வதிரி

# இப்பகுதிகளுக்கென மகளிர் கல்லூரி அமைத்துத் தருக!

## கரவெட்டி மத்தி கிராமோதய சபை கோருகிறது

[கரவெட்டி]

கரவெட்டி, கரணவாய், துன்னாலை, நெல்லியடி, வதிரிப் பகுதிகளைச் சேர்ந்த மாணவிகளின் கல்வி வசதி கருதி இப்பகுதிக்கென மகளிர் கல்லூரி ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென கரவெட்டி மத்தி கிராமோதய சபை கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளது

கரவெட்டி மத்தியகிராமோதய சபையின் மாதாந்தக் கூட்டத்திலேயே இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக் கிராமோதய சபையின் மாதாந்தக் கூட்டம் அதன் தலைவர் திரு. இ. மூத்துத்தம்பி தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போது, உடுப்பிட்டிப் பகுதிக்கென உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும், வல்லைப் பகுதிக்கென பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரியும், புலோலி மந்திகைப் பகுதி மாணவிகளுக்கென வடஇந்து மகளிர் கல்லூரியும் அமைக்கப்பட்டுள்ள போதிலும் கரவெட்டி, கரணவாய்' துன்னாலை, நெல்லியடி, வதிரிப் பகுதிகளைச் சேர்ந்த மாணவிகளுக்கென ஒரு மகளிர் கல்லூரி இதுகாலவரை நிறுவப்படாததால் இப்பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவிகள் தூர இடங்களிலுள்ள மகளிர் கல்லூரிகளை நாடிச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலுள்ளார்கள் என்று கவலை தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கரவெட்டி, கரணவாய், துன்னாலை, வதிரி, நெல்லியடிப் பகுதிக்கென மகளிர் கல்லூரி ஒன்றை நிறுவித்தருமபடி கல்வி அமைச்சரைக் கோருவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் இது சம்பந்தமாக மகஜர் ஒன்றை கல்வி அமைச்சருக்கு அனுப்புவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பிரஸ்தாப மகஜரில் மகளிர் கல்லூரியை அமைப்பதற்கு வசதியாக கரவெட்டி திருஇருதயக் கல்லூரி இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டுவது என்றும் முடிவுசெய்யப்பட்டதுடன் மகஜரின் பிரதிகளை யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர், எதிர்க்கட்சித் தலைவர், உடுப்பிட்டி எம். பி. உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி ஆகியோருக்கும் அனுப்பி வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் வடமராட்சிப்பகுதியில் இம்முறை நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்களில் அநேகர் நஷ்டம் அடைந்துள்ளதால் அவர்களுக்கு நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கு சமூக சேவை அமைச்சின் உதவியை நாடுவது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் இக்கிராமோதய சபையின் அங்கத்தவர் திரு க முருகப்பாவின் மறைவுக்கு அனுதாபமும் தெரிவிக்கப்பட்டது.

---

மாநகரின் அபிவிருத்திக்கு

# பாரிய திட்டங்களைச் செயற்படுத்துவது மத்திய அரசின் கடமை

மக்கள் கருத்து

யாழ். மாநகரத்தின் இன்றைய நிலைகுறித்து (10-2-83) ஈழநாட்டில் நண்பர் ஒருவர் மிகவும் வருத்தப்பட்டு எழுதியிருந்தார்.

யாழ் மாநகராட்சி மன்ற நிர்வாகம் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாகதெரிவுசெய்யப்பட்ட திரு. இராசா விசுவநாதன் தலைமையில் உள்ளது.

தற்போதைய நிர்வாகம் 1979 மே மாதம் நடைபெற்ற தேர்தலின் போது தெரிவு செய்யப்பட்டது.

அப்போது நடைபெற்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்னகொள்கையை முன்வைத்துப் போட்டியிட்டது? யாழ். மாநகர வாக்காளர்கள் என்ன காரணம் கருதி தமிழர் விடுதலைக்கூட்டணியை தெரிவு செய்தனர் இக்கேள்விக்கான பதிலை அறிந்து கொண்டால் நண்பருக்கு இத்தகையவருத்தம் ஏற்பட்டிருக்காது.

''சுதந்திரம் கோரி நிற்கும் தமிழ் மக்கள் 1977ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியை அமோகமாக வெற்றிபெறச் செய்தனர் சுதந்திரத்திற்காக உழைக்கும்படி தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு ஆணை வழங்கினர். இந்த ஆணை தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.''

சுதந்திரத்திற்கான இயக்கம் முனைப்புற்றிருக்கும் இவ்வேளையில் உள்ளூராட்சி மன்றங்கள் தமிழ்மக்களின் இலட்சிய வேட்கையைப் பிரதிபலிப்பதாக அமையவேண்டும்.

''சுதந்திரத்துக்கான இயக்கத்தை நடத்தும் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு உள்ளூராட்சி மன்றங்கள் முட்டுக்கட்டையாக இல்லாமல் ஒத்துழைப்பு வழங்கக்கூடியதாக விளங்க வேண்டும்.''

இவைதான் 1979 மே இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது தமிழர் விடுதலைக்கூட்டணியால் வாக்காளர் முன்னிலையில் வைக்கப்பட்டவை ஆகும்.

மாறாக தேர்தலில் போட்டியிட்ட ஏனையகட்சிகள் மாநகரத்தின் அபிவிருத்திக்கான திட்டங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழ்ஈழக்கோரிக்கைக்கும் எதிரான கருத்துக்களையும் வாக்காளர் முன் வைத்தனர்.

குறிப்பாக ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியின் இரண்டு முக்கிய அமைச்சர்கள் யாழ் மாநகரத்தின் பல பகுதிகளுக்கும் சைக்கிள்களில் சுற்றுலா சென்று மாநகர அபிவிருத்தி பற்றியும் ஆளும் கட்சியினால் மட்டுமே இவற்றைச் செய்ய முடியும் என்றும் தாராளமாக சுதந்திரமாக பிரசாரத்தில் ஈடுபட்டனர். மாநகரத்தின் கரையோரப்பகுதிகளுக்குச் சென்ற அமைச்சர் ஒருவர்

### கு. குமாரதேவன்

தந்தை செல்வா பெயரில் கடற்றொழிலாளர்களுக்காக மாபெரும் வீடமைப்புத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தப் போவதாகவும் கூறியிருந்தார்.

தேர்தல் முடிந்தது அபிவிருத்திபற்றி கூறிய கட்சிகள் படுதோல்வியடைந்தன. ஆளும் கட்சிக்கு ஒரு ஆசனம் கூட கிடைக்கவில்லை மொத்தமுள்ள இருபத்து மூன்று ஸ்தானங்களில் தமிழர் விடுதலைக்கூட்டணி பதினெட்டு ஸ்தானங்களைப் பெற்று அமோக வெற்றி பெற்றது.

1978ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட புதிய அரசியலமைப்பு மூலம் தமிழ் மக்களுக்கு சகல உரிமைகளையும் வழங்கி விட்டதாகவும், ஏனையபாரபட்சங்களையும் நீக்கி விட்டதாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணி செல்லாக்காசாகி விட்டதாகவும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரச்சாரம் செய்து வந்த அரசாங்கத்துக்கும் உலகத்துக்கும் 1979ல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் உண்மைநிலையை உணர்த்தினர்.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் மத்தியில் அரசியலுக்குப் புறம்பாக அபிவிருத்தி எனக்கூறி உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றிபெற்றிருந்தவர்கள் எவ்வாறு அரசாங்கங்களின் கைபொம்மையாகிய தமிழ் மக்களுக்குப்பாதகமாக நடந்துகொண்டனர் என்பது தமிழ் மக்களுக்கு குறிப்பாக யாழ். மாநகர மக்களுக்குநல்ல அனுபவமாகும்.

எனவே மாநகரமக்கள் இவ்வாறான சிந்தனைக்கு இனி இடமளிக்க மாட்டார்கள் தமிழ் மக்கள் மத்தியில் கடந்த காலங்களில் அபிவிருத்தியா? சுதந்திரமா? என்ற கேள்வி தொக்கிநின்றது உண்மை. பாராளுமன்றத் தேர்தல்களில் கூட சில சமயங்களில் சில தொகுதிகளில் அபிவிருத்தி கருதி மக்கள் வாக்குப்போட்டனர்.

ஆனால் தமிழ்மக்கள் இன்று ஆலபடிகளைத் தாண்டிவிட்டார்கள் சுயநலம் கருதி தமிழ்மக்களின் ஒற்றுமையைக் குலைக்க முயலுபவர்களையும் அரசியலுக்குப்புறம்பாக அபிவிருத்தி எனக்கூறும் அரசின் கையாட்களையும் அடையாளம் காணும் அரசியல் ஞானம் அவர்களுக்கு உண்டு.

### நகரின் அபிவிருத்தி

அன்றியும் மாநகராட்சி மன்ற நிர்வாகம் என்பது கிடைக்கும் வரிப்பணத்தைக் கொண்டு நகரத்தைப் பரிபாலிப்பதேயாகும். கிடைக்கும் வரிப்பணம் மாநகரத்தின் அன்றாட தேவைகளான சுகாதாரம், குடிநீர் விநியோகம் முதலியவற்றுக்கே போதுமானதாக இல்லை இந்நிலையில் மாநகரத்தின் அபிவிருத்தி குறித்து பாரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டியது மத்திய அரசாங்கத்தின் கடமையாகும்.

உள்ளூராட்சி அமைச்சின் கீழ் 'நகர அபிவிருத்தி அதிகார சபை' என்னும் ஓர் அமைப்பு உள்ளது நகரங்களில் பாரிய திட்டவேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு இச்சபைக்கு மக்களின் வரிப்பணத்தில் ஆண்டு தோறும் பல கோடி ரூபாக்கள் அரசாங்கத்தினால்

[5ம் பக்கம் பார்க்க]

## இளவாலை சித்திப்பந்தல் சம்பவம்:

# 22 சந்தேகநபர்கள் மீது குற்றப்பத்திரம் தாக்கல்!

## கொலை முயற்சி உட்பட 8 குற்றச்சாட்டுகள்!

(மாவிட்டபுரம்)

இளவாலை சித்திப்பந்தல் என்னுமிடத்தில் இடம்பெற்ற கொலைமுயற்சி தாக்குதல், சேதம் விளைவித்தமைபோன்ற சம்பவங்கள் தொடர்பாக 22 சந்தேக நபர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்ய பட்டுள்ளது.

இளவாலை சித்திப்பந்தல் என்னுமிடத்தில் துப்பாக்கி, வாள் மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் வந்த கோஷ்டியொன்று துப்பாக்கிப்பிரயோகம் செய்தும் ஆடு ஒன்றை வெட்டிக்கொன்றும் கடையொன்றைக் கொள்ளையடித்தும் பயங்கர வெறியாட்டம் ஒன்றை நடத்தியது தொடர்பாக இளவாலை சித்திப்பந்தலைச் சேர்ந்த அடைக்கலசாமி புஷ்பராஜா, இராசேந்திரம் கிறிஸ்ராஜு, சின்னத்துரை தங்கராசா, தங்கராசா ரூபின்சன், எஸ். அடைக்கலசாமி ஆகியோரும், மாதகலைச் சேர்ந்த இராசேந்திரம் அருமைநாயகம் என்பவரும் காங்கேசன்துறைப் பொலிசில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக அ. மரியதாஸ், செ அருமைத்துரை, சி. சேவியர், இ. இராசா, செ குணம், சீ. அருமைத்துரை, செ. மரியதாஸ், ம. மகாலிங்கம், ம பேரின்பநாயகம், ம. ஜெயராஜா, ம. ஜெயரட்ணம், பொ. புஷ்பராஜா, செ. செல்லத்துரை, இ. பீற்றர், ஆ. ஆரோக்கியநாதன், தொ. அந்தோனிபர்னந்து, அ. அமலநாதன், ஜோ. அல்பிரட், ஆ பத்திநாதன், தொ. தீதபங்கலன், ப. ஜேசுநாயகம், அ. பெரனுத்துரை ஆகிய 22 சந்தேக நபர்கள் கைதாகியும், சரண் புகுந்தும் பின்னர் பிணையில் விடப்பட்டிருந்தனர்.

இந்த 22 பேர் மீதும் துப்பாக்கியால் சுட்டுக் கொலை முயற்சி மேற்கொண்டது; தாக்குதல் நடத்தியது, சேதம் விளைவித்தது போன்ற 8 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு காங்கேசன்துறைப் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நபர்கள் தாம் சுற்றவாளிகள் எனக் கூறவே நீதிபதி திரு சீ. வி. விக்னேஸ்வரன் வழக்கை விசாரணை செய்யும் பொருட்டு மார்ச் மாதம் 1-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

வழக்காளிதரப்பில் காங்கேசன்துறைப் பொலிசாருடன் சட்டத்தரணி கே. குணரத்தினம் ஆஜரானார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், சட்டத்தரணி திருமதி கமலா சொர்ணலிங்கத்துடன் ஆஜரானார்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை 6.00 - இன்றையநிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்பு.

6.01 - சிறுவர் நிகழ்ச்சி,

6.30 - தொலைக்காட்சித் தயாரிப்புகள் பற்றிய விசேட நிகழ்ச்சி,

7.00 - செய்திகள் (தமிழ்).

7.14 - நாளைய நிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்பு,

7.15 - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கலாச்சார நிகழ்ச்சிகளின் நேரடி ஒளிபரப்பு

8.45 - செய்திகள் (சிங்களம்)

9.00 - வெளிநாட்டுச் செய்தி அறிக்கை

9.15 - 'எப். ஏ' வெற்றிக் கிண்ணம் - உதைபந்தாட்டம் 1983 நிகழ்ச்சி

9.30 - செய்திகள் [ஆங்கிலம்]

9.45 - 'எப். ஏ' வெற்றிக் கிண்ணம் 83 நிகழ்ச்சி (தொடர்ச்சி)

10.00 - ஒளிபரப்பு முடிவு.

## கிளிநொச்சி வர்த்தகர் மர்ம மரணம்:

# எரிக்கப்பட்ட நிலையில் தடயப்பொருட்கள்;

# இரத்தக் கறை படிந்த கல் சிக்கியது

## சட்ட வைத்திய அதிகாரி புகைப்படம் பிடித்தார்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மர்மமான முறையில் மரணமான வர்த்தகர் ஐயாத்துரை இராசநாயகம் மரணம் தொடர்பாக யாழ். சட்ட வைத்திய அதிகாரி சரவணபவானந்தன் கிளிநொச்சிக்கு வருகைதந்து சம்பவம் நடைபெற்ற இடங்களை நேரில் பார்வையிட்டார்.

அங்கு தடயப் பொருட்கள் சிலவற்றைக் கண்டெடுத்ததுடன் மரணம் நடைபெற்ற இடத்தில் சிலதடயப் பொருட்கள் எரிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டு அவற்றைப் புகைப்படம் பிடித்தும் சென்றுள்ளார்.

தடயப்பொருட்கள் இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்படவுள்ளது.

மர்மமான முறையில் மரணமான ஐயாத்துரை இராசநாயகத்துக்கு 'சேவிஸ் நிலையம்' ஒன்று நல்லூர் சட்டநாதர் கோவிலடியிலும் மற்றொரு சேவிஸ் நிலையம் கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்திலும் இருக்கிறது. செல்வந்தரான இவரது மனைவி பருத்தித்துறையில் ஆசிரியையாகக் கடமையாற்றி வருகிறார். இவருக்கு எட்டுவயதில் ஒரு ஆண் பிள்ளையுமுண்டு.

இவரது மரணம் சம்பந்தமாக கைது செய்து றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள ஐயாத்துரை வேதநாயகமும் இவரது மகன் வேதநாயகம் உதயகுமாரும் சம்பவ தினம் வரை கிளிநொச்சி சேவிஸ் நிலையத்தில் கடமையாற்றியுள்ளனர் என்றும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சொத்து சம்பந்தமாகப் பகைமை இருந்து வந்ததாக மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டதை அடுத்து உதயகுமாரின் நண்பரான சோதீஸ்வரன் என்ற இளைஞரையும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

கொலைக்குப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் சைக்கிள் ஒன்றையும் பொலிசார் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அண்மையில் வாய்க்காலில் இருந்து மீட்டனர். இதைத் தொடர்ந்து சட்ட வைத்திய அதிகாரி சரவணபவான் சம்பவம் நடைபெற்ற இடங்களைப் பார்வையிட்டு ஸ்தல பரிசோதனை மேற்கொண்டதுடன் சடலம் மீட்கப்பட்ட இடத்தில் இருந்து இரத்தக் கறைபடிந்த கல் ஒன்றை மீட்டதுடன் மரணமானவர் வசித்துவந்த சேவிஸ் நிலையத்திற்கு அருகில் தடயப்பொருட்கள் எரிக்கப்பட்ட இடங்களையும் புகைப்படம் பிடித்துச்சென்றுள்ளார்.

இதுதவிர வவனியா ஏ. எஸ். பி சுவேந்திரன் சம்பவம் நடைபெற்ற இடங்களையும் பார்வையிட்டுச் சென்றுள்ளார். (ஈ)

## 1958 கலவரத்தில் அல்லல்பட்ட

# தமிழரைக் கரைசேர்க்க கப்பலோட்டிய தமிழன்

## அமரர் தம்பிஐயாவுக்கு அஞ்சலி

(நெடுந்தீவு)

காவலூர் தொகுதி வாக்காளர்கள் அமரர் ஏ எல். தம்பிஐயாவின் வக்காளர்கள் என்று இன்றும் கணிக்கப்படுகின்றார்கள். அவர்களுடைய வாக்குகளையிட்டு ஆய்வு நடாத்தும் அரசியல் வாதிகளும் உண்டு. அந்த அளவிற்கு ஏ.எல். தம்பியையாவின் ஆதரவாளர் அணி காவலூர்த் தொகுதி எங்கும் பரவிக் கிடக்கிறது.

மேற்கண்டவாறு அமரர் அல்பிரட் தம்பிஐயாவின் ஞாபகார்த்த விழாவில் மலர் வெளியீட்டு உரை நிகழ்த்திய புலவர் ஈழத்துச் சிவானந்தன் கூறினார். நெடுந்தீவு மகாவித்தியாலய திறந்த வெளியரங்கில் இந்து இளைஞர் பேரவைத் தலைவர் வை. இராஜேஸ்வரன் தலைமையில் ஞாபகார்த்தப் பெருவிழா நடைபெற்றது.

தம்பிஐயா ஞாபகார்த்த மரம் நாட்டு வைபவமும் நடைபெற்ற இப்பெருவிழாவைப் பிரதம கல்வி அதிகாரி சபாநாயகம் தொடக்கிவைத்தார். கல்வியதிகாரி திரு எஸ். சபாநாயகம் சிறப்பு மலரை வெளியிட்டுவைக்க முதற்பிரதிகளை மில்க்வைற் அதிபர் க கனகராஜாவும் அண்ணுசேசப்பி அதிபர் பி. நடராஜாவும் பெற்றுக்கொண்டனர்.

திருமதி. இராஜேஸ்வரி தம்பிஐயாவும், ரவிதம்பிஐயாவும், சுபோ தம்பிஐயாவும் அமரர் தம்பிஐயாவின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர் நெடுந்தீவு கிழக்கு கிராமசேவையாளர் திரு. நா. கணபதிப்பிள்ளை உருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைத்த இவ்விழாவில் புலவர் சிவானந்தன் தொடர்ந்து கூறியதாவது. 1956 லும் 1958லும் நடைபெற்ற இனக்கலவரத்தின்போது, அரசாங்கத்தின் அனுசரணையில்லாமல் தனது கப்பல்கள் மூலமாக அல்லல்பட்ட தமிழ் மக்களை ஏற்றி தமிழ்ப்பகுதிக்கு கரை சேர்த்த கப்பல் ஓட்டிய தமிழன் தம்பிஐயா, தேர்தல் காலத்தில் எதிரிகளின் கசப்பான வார்த்தைகளையும் கண்ணியக் குறைவான நடத்தைகளையும் சிரித்தபடி சகித்துக் கொண்டவர்.

தீவுப்பகுதிமக்களுக்குத்தனது தொழில் ஸ்தாபனங்களில் வேலை வாய்ப்பையும் வழங்கியதோடு அரசாங்கத்திலும் வேலைகளைப் பெற்றுக் கொடுத்தார்

திரு. க. குகதாசன், சதாசிவம் சேவையர், தி. கணபதிப்பிள்ளை, வ. சுவாமிநாதன் எம். அன்ரனி, க. செல்லையா உட்பட பலர் உரையாற்றிய இப் பெருவிழா நடைபெறுவதற்கு முன்பு நெடுந்தீவு கிறிஸ்தவ தேவாலயத்தில் விசேட பூஜையும் ஆராதனையும் நடைபெற்றன.

## பாரிய...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கப்படுகிறது. இதைவிட இச்சபை வெளிநாடுகளின் நேரடி நிதிஉதவிகளைக்கொண்டும் நகரங்களின் அபிவிருத்தி குறித்து திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது.

ஆனால் தமிழ்ப்பிரதேசங்களிலுள்ள நகரங்களின் வளர்ச்சி குறித்து இதுவரை எந்தவிதமான திட்டங்களையும் இச்சபை நடைமுறைப்படுத்தவில்லை.

அதுபோன்றே 'தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை' எனவும் ஒருஅமைப்பு உள்ளது இதுவும் அரசாங்கத்திடமிருந்து பலகோடி ரூபாக்களை ஆண்டுதோறும் பெற்று வருகிறது.

முன்கூறப்பட்ட சபையைப் போன்றே இச்சபையும் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள நகரங்களின் நீர்விநியோகம் குறித்தோ சுகாதாரத்துக்கு அத்தியாவசியமான வடிகாலமைப்புத்திட்டம் குறித்தோ எதனையும் நடைமுறைப்படுத்தவில்லை.

அரசாங்கத்தை ஆதரித்தால் அபிவிருத்தி நடக்கும் என நினைப்பவர்கள் யாரும் இருந்தால் அவர்கள், நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களில் மூவர் [அவர்களில் இருவர் அமைச்சர்கள்] அரசாங்க உறுப்பினர்களாக இருக்கும் மட்டக்களப்புக்குச் சென்று பார்த்தால் உண்மைநிலை விளங்கும்.

நூல்... சொப்டகைகளைக் கொண்ட பஸ்நிலையத்தையும் இருக்கும் கட்டிடங்கள் அனைத்தும் சூறாவளி நினைவுச்சின்னங்களாகவிளங்கும் அதிசயத்தையும் காணக்கூடியதாக இருக்கும். கிழக்கிலங்கையின் தலைநகரமாக விளங்கிய மட்டுநகர் தற்போது அந்த அந்தஸ்தை இழந்துவிட்டது.

இவ்வாறு தமிழ்ப்பிரதேசங்களிலுள்ள நகரங்களின் வளர்ச்சி குறித்து எவ்வித நடைமுறைப் படுத்தாத அரசின் படைகள் காலத்துக்குக்காலம் எமது நகரங்களை நாசப்படுத்தி வருகின்றன.

தமிழ்மக்களின் அறிவாலயமாக விளங்கிய நூலகம் பாராளுமன்ற உறுப்பினரின் இல்லம், யாழ் நகரத்தின் கேந்திர நிலையமாக விளங்கியதும் பாரிய கட்டட அமைப்புக்களைக் கொண்டிருந்ததுமான பழைய சந்தைக் கட்டிடம், தமிழ்மக்களின் இலட்சியத்தைப் பிரதிபலித்து வருகின்ற 'ஈழநாடு' பத்திரிகையின் அலுவலகம் இன்னும் ஏராளமான வர்த்தக ஸ்தாபனங்கள் அரச படைகளினால் கொளுத்தப்பட்டுச் சுடுகாடாக்கப்பட்டன.

இவற்றுக்கெல்லாம் காரணம் தமிழ்மக்கள், எங்கள் நாடு அடிமைநிலையிலிருப்பதேயாகும். சுதந்திர நாடொன்றில் அரச படைகளினால் பொதுச்சொத்துக்கள் இவ்வாறு நாசப்படுத்தப்படுவது கற்பனையிலும் நினைத்துப் பார்க்கமுடியாததாகும்.

பாதுகாப்பாற்றஅபிவிருத்தி அர்த்தமற்றதாகும். தமிழ் மக்களுக்குத் தேவையானது பாதுகாப்புடன் கூடிய அபிவிருத்தியேயாகும். ஏனெனில் நாம் செய்யக்கூடிய அபிவிருத்தி அனைத்தையும் அரசபடைகள் ஒருகணப்பொழுதில் அழித்துவிடமுடியும். பலஆண்டுகளாக கட்டி எழுப்பப்பட்ட யாழ் நூலகம் இவ்வாறாக ஒரு இரவில் அழிந்தது.

இவ்வாறான அழிவுகள் தமிழ் மக்களை தங்கள் இலட்சியத்தை நோக்கி மென்மேலும் செல்ல தூண்டும் எமது நிலையை உணராதவர்களை உணரவைக்கவும் பயன்பட்டுள்ளன.

1981ம் ஆண்டு நடைபெற்ற அபிவிருத்திச்சபைத் தேர்தலின்போது இவ்வாறான அழிவுகளுக்கும் சுட்டுக்கொல்லப்பட்ட பிரேதங்களுக்கும் மத்தியில் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களித்தன் மூலம் தங்கள் இலட்சிய தாகத்தையும், ஒற்றுமை உணர்வையும் காட்டினர்.

ஆகவே நாம் அபிவிருத்தி பற்றி பேசுவதற்கு முதல் எமது விடுதலையை நோக்கிச் செயற்படுதல் நலமாகும்.

அந்த வகையில் தற்போதைய யாழ். மாநகர நிர்வாகம் குறிப்பாக முதல்வர் விசுவநாதன் அவர்கள் தமிழ் இன விடுதலை கருதி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழ் மக்களுக்கும் பலசேவைகளைப் புரிந்துள்ளார். அவற்றையெல்லாம் இங்கு விரித்து எழுதுதல் இயலாத காரியமாகும். ஆனால் மக்கள் நன்குணர்ந்துள்ளார்கள்.

## அதிபர்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யாற்ற அனுமதி வழங்கியதாங்கள். 1978ம் ஆண்டு பணம் கட்டிப்பரீட்சை எடுத்து இரு தடவைகள் நேர்முகப் பரீட்சைக்குக் கொழும்புக்கு அழைக்கப்பட்டு ஐந்தாண்டுகளின்பின் அதிபர் பதவி உயர்வு வழங்கி பிற மாவட்டம் செல்லக் கேட்பது நீதியாகாது. இதனை எடுத்துக் காட்டுவதற்காக எனக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வை நான் ஏற்றுக் கொள்ளவில்லை'' என்று ஆனைக்கோட்டை அ. மி. த. க. பாடசாலை ஆசிரியரும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ்ப்பாண மாவட்டப் பிரசாரச் செயலாளருமான திரு ந. சிவபாதம் கல்விச் சேவைகள் கமிஷன் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

ஐந்தாண்டுகளின்முன் பதவி உயர்வு வழங்கியிருந்தால் பிற மாவட்டங்களில் அதிபராகக் கடமையாற்றித் தற்போது சொந்த மாவட்டத்தில் கடமையாற்றும் வாய்ப்பு ஏற்பட்டிருக்குமெனவும், தற்போதைய வாழ்க்கைச் செலவைக் கருத்தில் கொண்டும் தரப்படும் பதவி உயர்வுக்குரிய சம்பளத்தை உதவி ஆசிரியராக இருந்தே பெற முடிகின்றதென்றும், வெறும் பெயருக்காக இப்பதவி உயர்வு வேண்டியதில்லை எனவும் மேலும் தனது கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

# பருத்தித்துறையில் இன்று 'கம்பன்விழா' ஆரம்பம்

(புலோலி)

வடமராட்சி கம்பன் கழகத்தின் கம்பன்விழா இன்று காலை ஆரம்பமாகி 3 தினங்கள் பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய பர்வதவர்த்தனி கலா மண்டபத்தில் நடைபெறுகிறது.

முதலாம் நாளான இன்று கம்பன் விழாவை திரு. க. நாகரத்தினம் (குகன்) மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார் வடமராட்சிக் கம்பன் கழகத் தலைவர் சட்டத்தரணி இ. உருத்திரா வரவேற்புரையும் சுவாமிசித் ரூபானந்தா வித்துவான் க. ந. வேலன் ஆகியோர் ஆசியுரையும் வழங்குவார்கள் விழாவிற்கு திரு. மு. பொ. வீரவாகு தலைமை தாங்குவார். திருச்சி தேசியக் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணனை நடுவராகக் கொண்டு கம்பராமாயணத்தில் விஞ்சிய சிறப்பு ஆண்மை வீரத்திற்கா? பெண்மைக் கற்பிற்கா? விடயம் பற்றி பட்டிமன்றம் இடம் பெறும். திரு. க. தங்கராசா நன்றியுரை வழங்குவார்.

இரண்டாம் நாளான நாளை யாழ். உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு. த. மார்க்கண்டு தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் கரு. எஸ். வேல்முருகு வரவேற்புரையும் சட்டத்தரணி என். கிருஸ்ணராசா, பண்டிதர் கி. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் ஆசியுரையும் வழங்குவார்கள். வித்துவான் சி. ஆறுமுகம் தலைமையில் 'இவ்வாறு படைத்தாயே ஏன்?'' கவியரங்கமும் கம்பனின் தொண்டுபற்றி இரா. இராதாகிருஷ்ணனின் சிறப்புரையும் இடம் பெறும். திரு. சு. திருச்செல்வம் நன்றியுரை வழங்குவார்.

மூன்றும் நாளான 17ம் திகதி திரு. சிவா. கிருஷ்ணமூர்த்தியின் வரவேற்புரையுடனும், வித்துவான் கி. ஆறுமுகம், வட்டாரக் கல்வியதிகாரி திரு. வீ. கே. ஈசுரபாதம் ஆகியோரின் ஆசியுரையுடனும் ஆரம்பமாகும் விழாவுக்கு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தலைமை தாங்குவார் வித்துவான் க. ந.வேலன் தலைமையில் 'இன்று இவர்கள் சந்திப்பு' நடைபெறும் ''மயன்மகள்'' பற்றி பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் சிறப்புரையாற்றுவார். திரு. ஆ. தேவராசன் நன்றியுரை வழங்குவார். (க)

## மோட்டார் சாரதிகளுக்கு புதிய ஒழுங்குமுறை

சென்னை, பெப் 14

மோட்டார் வாகனமோட்டிகளாகத் தொழில்செய்வோர் தவிர்ந்த ஏனைய மோட்டார் வாகன மோட்டிகள், தமது புகைப்படத்தை தமது வாகனங்களின் முன்புறக் கண்ணாடியில் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக ஒட்டிவைத்திருக்க வேண்டும் என்று கோரும் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஒழுங்கு முறை மார்ச் மாதம் முதல் சென்னையில் அமுலாகவுள்ளது.

இவ்விதியை மீறுவோர்மீது உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான அபராதம் விதிக்கவும் கட்டுப்பாடுகளை விரைவாகப் பரிசீலனை செய்யவும் சென்னை நகரில் பத்துக் கண்காணிப்புக் கட்டுப்பாட்டு அலுவலகங்கள் முன் கூட்டியே திறக்கப்பட்டுள்ளன. [உ]




## கணவன் கண்டித்ததால் 5 பிள்ளைகளின் தாயான கர்ப்பிணி தற்கொலை!

(வவனியா)

அயல் வீட்டில் அரட்டை அடிக்கச் சென்றதைக் கணவன் கண்டித்ததால் ஐந்து மாதக் கர்ப்பிணிப் பெண் தற்கொலை செய்துகொண்டார்.

வவனியாப் பொலிஸ்பிரிவில் உள்ள தவசிகுளத்தைச்சேர்ந்த 24 வயதான தங்கையா இராஜலட்சுமி என்ற ஐந்து மாதக் கர்ப்பிணியே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

மரணவிசாரணையை வவனியா மாவட்ட மரணவிசாரணை அதிகாரி டாக்டர் எஸ். பாலசிங்கம் நடத்தினர்.

விசாரணையின்போது இறந்தவரின் கணவன் தங்கையா சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

எனக்கு ஐந்து ஆண்பிள்ளைகள் உண்டு. தற்போது மனைவி ஐந்து மாதக் கர்ப்பிணி நான் கமத்தில் வேலைசெய்தபோது தண்ணீர் இறைக்கும் இயந்திரம் பழுதடைந்துவிட்டது. இதனால் இயந்திரத்தைத்திருத்துவதற்கு சம்பந்தப்பட்ட கருவிகளை எடுப்பதற்கு வீட்டுக்கு வந்தேன். வீடு பூட்டியிருந்தது. மனைவி பக்கத்து வீட்டில் போய் இருந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்ததை அவதானித்தேன். மனைவியை அழைத்து வன்மையாகக் கண்டித்தேன்.

இதன் காரணமாக மனைவி தொடர்ந்து மூன்று தினங்கள் மனமுடைந்து காணப்பட்டார். அடுத்த நாள் காலை தாம் நஞ்சருந்திவிட்டதாகத் தெரிவித்தார். உடன் முதலுதவிச் சிகிச்சையளித்தும் பயன் ஏற்படவில்லை

பிரேத பரிசோதனையை வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சோமசுந்தரம் நிரஞ்சன் நடத்தினர். சாட்சிகளை வவனியாப் பொலிஸ் அதிகாரி திரு கே. நவரத்தினம் ஆஜர் செய்தார்.

தற்கொலையெனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. [அ]

## சண்டிலிப்பாய் கொள்ளை வழக்கு ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

சண்டிலிப்பாய் கடையொன்றில் கொள்ளையடித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபர் தாம் சுற்றவாளி என்று கூறியதால் வழக்குவிசாரணைக்காக ஒத்திபோடப்பட்டது.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த குணரத்தினம் குணேஸ்வரன் என்பவரது கடையை உடைத்து 4585 ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்தது தொடர்பாக சின்னத்துரை கணேஸ்வரன் என்னும் நபர் மீது குற்றஞ்சாட்டி காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தனர்.

மேற்படி சந்தேகநபர் சுற்றவாளி எனக்கூறியதால் நீதிபதி வழக்கை விசாரணை செய்வதற்காக மே மாதம் 30ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிதரப்பில் சட்டத்தரணி ஆர். ஜே செல்வரத்தினம் சட்டத்தரணி திருமதி கமலா சொர்ணலிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

## குளிர்பானக் கடையில் திருட்டு!

[யாழ்ப்பாணம்]

குளிர்பானக் கடை ஒன்று உடைக்கப்பட்டு ரொக்கப் பணம் உட்பட 4,000 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

சுன்னாகத்திலுள்ள ஒரு 'கூல் பார்' கடையிலேயே இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

கடை உடைத்துச் சென்ற திருடர்கள் சிகரட்வகைகளுடன், ரொக்கப்பணமும் கசட் டேப்புகளும் வைக்கப்பட்ட சூட்கேசையும் திருடிச் சென்றுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடை உரிமையாளர் புகார்செய்துள்ளார். உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். சிவராசா விசாரணை மேற்கொண்டுள்ளார். [மா]

## விபத்தில்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

சுயநினைவு திரும்பவில்லையாம்.

இவ்விபத்தின்போது காரை ஒட்டிச்சென்ற கட்சன் என்பவரை கைதுசெய்த கிளிநொச்சிப் பொலிசார் காரையும் கைப்பற்றினர்.

சந்தேகநபரான கட்சன் கிளிநொச்சி நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு 500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். காரும் விடுவிக்கப்பட்டது.

இவ்விபத்திற்காளானவர் சுயநினைவு திரும்பாததனைத் தொடர்ந்து கிளிநொச்சி நீதவான் ரி. யோகநாதன் ஏற்கனவே 500 ரூபா பிணையில் விடப்பட்ட சந்தேகநபரான கார் சாரதியை மீண்டும் கைது செய்து தம்முன் ஆஜர்செய்யுமாறு பொலிசாரை பணித்துள்ளார். (க)

## சனிதோறும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கோளைத் தொடர்ந்து யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 4-30 மணிதொடக்கம் 'ஓம் சாந்தி' ஜெபிக்கப் பட்டுவருகிறது. (க)

## ஆனந்தம் வெளிநாடுபயணம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட உதவி உணவுக் கட்டுப் பாட்டதிகாரி திரு ஜே. எஸ். எஸ் ஆனந்தம் இரண்டு வாரம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உணவு விவசாய நிறுவனத்தால் நடத்தப்படும் நாடுகளின் உணவுதானியங்களின் உற்பத்தியும் தரமும்'' பற்றிய மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக உணவு ஆணையாளரின் பிரதி நிதியாக பாங்கொக் பயணமானர்.

## பதவி உயர்வு

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதி அம்பன் விவசாயப் போதனாசிரியர் பகுதி விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் திருமதி அ. அருளானந்தம் விவசாயப்போதனாசிரியையாக விவசாய அமைச்சினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

விவசாயப் போதனாசிரியையாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ள திருமதி அருளானந்தம் முல்லைத்தீவுத் தொகுதி கொக்குத் தொடுவாய் விவசாய விவசாயப் போதனாசிரியையாகப் பொறுப் பேற்றுள்ளார். [க]

# இன்றைய பலன்

மாசி மாதம் 3-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(15—2—83)

மேடம்: சிறிவரும் கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும், எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத விதமாக உடல் நலம் பாதிக்கப்படலாம்.

இடபம்: அறிவுப் பணியில் அதிக ஆர்வம் பிறக்கும், ஆராய்ச்சியாளருக்கு புதிய கருவிகள் கிடைக்கலாம். வாகனச் சாரதிகள் பயனடைவார்கள்.

மிதுனம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும், புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும். நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கும் இடமுண்டு. பிள்ளை ஒன்றின் கல்வி முன்னேற்றம் கிடைக்கும்

கடகம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத்தொடரும் இன்று அதிக பேச்சை தவிர்த்துக்கொள்ளவும், அரசியல்வாதிகளாயின் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளவும்.

சிங்கம்: குடும்பத்தில்மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும், பெரியோர்களின் உதவி தாராளமாகக் கிடைக்கும், பொருள் வருவாயில் புதிய திருப்பம் ஏற்படும்.

கன்னி: செய்யும் தொழிலில் சிரமங்கள் தோன்றக்கூடும், உடல் நலமும் சிறிதுபாதிக்கப்படலாம், நண்பர் ஒருவர் உங்கள் காலைவாரி விடுவதற்கு முனையக்கூடும்.

துலாம்: புண்ணிய விருப்புக்களில் ஆர்வம் பிறக்கும், பெரியோர்களின் உதவிக்கு இடம் உண்டு, கொண்ட கொள்கையில் அதிக உறுதிப்பாடு தென்படும்.

விருட்சிகம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள், பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும், சொந்தமாக தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும்.

தனு: புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும், புத்திரர்களுடைய செல்வாக்கு பெருகும், புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும்

மகரம்: எதிர்பாராதவிளைவுகளின் மூலம் செலவுகள் அதிகமாகும், சிலர் வாழ்க்கையில் கடன்பட நேரிடும், பிணிக்கு இடம் கொடாது இருக்கவும்.

கும்பம்: முன்னேற்றம் தடைப்படும், குறுக்கு வழித்தலையீடு குழப்பங்களை ஏற்படுத்தலாம், எதேச்சாதிகாரப் போக்கால் சிலரைப் பகைத்துக் கொள்ள நேரிடும்.

மீனம்: இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம் பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப் படுத்துவார்கள், நீண்ட நாள் பூமிப் பிணக்கு இன்று நிவர்த்தியாகும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## வடமராட்சியில் சிவராத்திரிவிழா

[புலோலி]

பருத்தித்துறை — மந்திகை பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா சமித்தியில் சிவராத்திரி விழா நடைபெற்றது.

அன்றிரவு மாலை 6 மணி தொடக்கம் மறுநாட் காலை 6 மணி வரை தொடர்ந்து பஜனைகளும் ஆராதனைகளும் இடம்பெற்றன. நான்கு சாமப் பூசைகளும், அபிஷேகமும் நடைபெற்றது. காலை 5 மணிக்கு நகரசங் கீர்த்தனமும் இடம்பெற்றது. பகவானின் ஆகி பெற்ற திருநீறும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டன.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்திலும் மகாசிவராத்திரி விழா நடைபெற்றது.

## நவீன மண்டபம் நிறுவ ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப் வை. எம். சி. ஏ. பண்டத்தரிப்பில் நவீன வசதிகள் அடங்கிய மண்டபம் ஒன்றை சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் நிறுவுவதற்கு தீர்மானித்துள்ளது.

பண்டத்தரிப்பு பட்டினப் பகுதியில் பொதுவைபவங்கள், கூட்டங்கள் ஆகியனவற்றை நடாத்துவதற்கு வசதியான மண்டபம் எதுவும் இதுவரை காலமும் இல்லாதிருந்தது என்றும், இக்குறைபாட்டை நீக்குமுகமாக வை. எம். சி. ஏ. சார்பில் இந்த பொதுமண்டபத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. இயக்கத்தின் செயலாளர் ஆசிரியர் திரு. எஸ். இரத்தினவேல் இதுபற்றித் தகவல் தெரிவிக்கையில் தெரிவித்தார். (க)

## "யாழ்.உதைபந்தாட்ட கழகம் முன்போலவே இருக்கிறது"

### புதிய தலைவர் மகிழ்ச்சி



(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத்திலுள்ள உதைபந்தாட்டக் கழகம் கடந்த காலங்களில் இருந்தது போலவே இன்றும் இருக்கிறது" இவ்வாறு 'யாழ்' உதைபந்தாட்டலீக்கின் வருடாந்தப்பொதுக் கூட்டத்தில் புதிய தலைவராக மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட வைத்தியகலாநிதி ஜே பி.ஸி. பிலிப் கூறினர். அவர் தமது தலைமையுரையில் மேலும்கூறியதாவது:-

"வெளி மாகாணங்களில் உதைபந்தாட்டதரம் வருடா வருடம் வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கிறது. ஆனால் யாழ்ப்பாணத்தின் உதைபந்தாட்டத்தரம் கடந்த காலங்களைக்காட்டிலும், மிகவும்தரம் குறைந்ததாகவே இருக்கின்றது அதற்கு முக்கிய காரணம் விளையாட்டுக் கழகங்கள் தம்வசமுள்ள சிறந்த விளையாட்டு வீரர்களைப், பயிற்சி முகாமுக்கு அனுப்பாமல் இருப்பதேயாகும்.

இவ்வருடம் இளம் வீரர்களைக்கொண்ட, ஒரு சிறந்த உதைபந்தாட்டக்கோஷ்டியை உருவாக்க எண்ணியுள்ளோம். அதற்கு சகல விளையாட்டுக் கழகங்களும் தங்களின் பூரண ஒத்துழைப்பை எமது சங்கத்துக்கு அளிக்கவேண்டும் என்றும் கூறினர்.

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின், புதிய வருட நிர்வாகிகள் விபரம் வருமாறு: தலைவர் டாக்டர் ஜே. பீ. ஸி. பிலிப், உபதலைவர்கள் திருவாளர்கள் சற். சிங்கராயர், எஸ். எஸ். எம். மாட்டின், எம். கிருபாகரன், எம். பேரின்பநாயகம், எஸ். என். ஜே, அன்ரனிப்பிள்ளை, சிங்கம் சூசைப்பிள்ளை, காரியதரிசி திரு ஈ. கே குமரையா. உபகாரியதரிசி திரு டானியல் அன்ரனி, தனாதிகாரி திரு கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, கணக்குப் பரிசோதகர் திரு பி, எஸ். அன்ரனி (இலங்கை வர்த்தகவங்கி)

மேற்படி உத்தியோகத்தர்கள் அனைவரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## "சிங்கள மக்களுக்கு நாம் எதிரானவர்களல்ல"

[வவனியா]

"சிங்கள மக்களுக்கோ, சிங்களக் கலாசாரத்திற்கோ நாம் எதிரானவர்கள் அல்ல. தமிழ் பகுதிகளில் நடைபெறும் விழாக்களில் அப்பகுதி மக்களின் கலாசாரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்"

இவ்வாறு வவனியா அபிவிருத்திச் சபை தலைவர் திரு எம். சிற்றம்பலம் வவனியா சீ சீ.ரி. எம்.எஸ் பாடசாலையில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் மகளிர் பயிற்சி நிலைய அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

பயிற்சிநிலையத் தலைவி செல்வி எம். விஜயசெல்வி வரவேற்புரை நிகழ்த்தினர்.

மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு எம்.ஜ.ஹோரத் பயிற்சி நெறியை அறிமுகம் செய்து வைத்தார்.

வவனியா தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். குணநாயகம் மன்றத்தின் பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

சீ.சீ.ரி.எம்.எஸ் பாடசாலை அதிபர் திரு மு பாலசுப்பிரமணியத்தின் ஆசியுரையைத் தொடர்ந்து வவனியா இளைஞர்சேவை அதிகாரி திரு எஸ். சிவபாலசிங்கம் நன்றியுரை கூறினர். (க)

## வயலுக்கு கிருமிநாசினி தெளித்தவர் மரணம்

[வவனியா]

வயலுக்கு கிருமி நாசினி தெளித்த பின் உணவு அருந்தும் போது மயக்கம் வருவதாக கூறிய இளைஞர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட போது அங்கு மரணமானர்.

வவனியா பம்பைமடுவைச் சேர்ந்த இராசையா பாலசுந்தரத்தின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

வவனியா மாவட்ட பதில் நீதிபதி திரு ஆர். வி. வில்வராஜா மரண விசாரணை நடத்தினர்.

விசாரணையின் போது இறந்தவரின் தாயார் இராசையா தங்கம்மா சாட்சியளித்தார்.

சம்பவதினம் இறந்தவர் வயலுக்கு கிருமிநாசினி தெளித்தபின் குளித்துவிட்டு வந்து உணவு அருந்தும்போது மயக்கம் வருவதாக கூறியதாகவும் உடனடியாக இவரை வவனியா அரசினர் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசென்றபோது அங்கு மரணமாகிவிட்டார் என்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணை முடிவில் மரண விசாரணை அதிகாரி விபத்து மரணமென தீர்ப்பளித்தார். [க]

## ஆங்கில...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

பெரும் பாதிப்படைந்து வருவதனல் இப்பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியர் ஒருவரைத் தந்துதவுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பருத்தித்துறை எம்.பி திரு கே துரைரத்தினம் யாழ் கல்விப்பணிப்பாளர் திரு. சிமியாம்பிள்ளை ஆகியோரைக் கோரியுள்ளது. [க]

## அதிபர் பதவியை ஏற்க மறுப்பு

[மானிப்பாய்]

"1980ம் ஆண்டு நிறைவேற்று அதிபர்களாக இருந்த ஆசிரியர்களுக்கு அவர்கள் வெளி மாவட்ட சேவை அதிபர்களாகக் கடமையாற்றிய காலம். அவர்கள் தகைமைகள் என்பவற்றைக் கருத்திற் கொள்ளாது அவர்கள் கடமையாற்றும் மாவட்டங்களிலேயே அதிபர்களாகக் கடமை

[5-ம் பக்கம் பார்க்க]


ரீகல் [யாழ். நகர்]
அ.நேகரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் 5 தினங்கள் மட்டும்
எங்க வீட்டுப் பிள்ளை

ஹரன் (யாழ்: நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
முரட்டுக் காளை

சாந்தி (யாழ். நகர்) 10-30, 2-30, 4-45, 7-00 9-30
Terence Hill—Ernest Borgnine in
Super Snooper (Action-Comedy-Color)

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 5 காட்சிகள்
BLOODY GOLANTINA

லிடோ [யாழ்: நகர்]
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
10-30, 2-00, 4-30, 7-00, 9-30
14th&15th only Walt Disney's
SNOW WHITE AND SEVEN DWARFS
(பாடசாலை பிள்ளைகள் மனேஜருடன் தொடர்பு கொண்டு விசேட ஒழுங்குகள் செய்துகொள்ளலாம்.)

ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமராவ், ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்
பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்துதரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்நகரில் இதுவே. கடைசி சந்தர்ப்பம்
இன்னும் சில தினங்கள் மட்டும்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

மனோகரா தினசரி 10-30, 2-15, 6-00, 9-45
(யாழ். நகர்)
ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ்
கே. மாலதி, எஸ். வி. ரங்கராவ், ரேலங்கி
பாதாள பைரவி
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி)

ராஜா தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ்- நகர்)
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (ஈஸ்ட்மன் கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

## மோட்டார் சைக்கிள் மினிபஸ் விபத்து: ஒருவர் பலி!

[மாத்தறை]

மோட்டார் சைக்கிள்-மினி பஸ் விபத்தில் ஒருவர் பலியானுர்.

தலைகாலே பெருந்தெருக்கள் திணைக்களத்தில் கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வி எஸ் நவரத்தினம் [48-வயது] மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது, மினி பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானுர் என்றும் உடனடியாக இவர் மாத்தறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு காலமானுர் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது காலம் சென்றவரின் மனைவி திருமதி சிவபாக்கியம் யாழ். தொலைபேசி இயக்குநராகக் கடமையாற்றுகின்றுர்.

## ஜனநாயக..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]


திபதி. நீதியமைச்சர், பிரதம நீதியரசர் ஆகியோர் மங்கள விளக்கேற்றி மகாநாட்டை ஆரம்பித்தனர்.

ஜனுதிபதி ஜயவர்த்தன தொடர்ந்து பேசுகையில், 'சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்னரே இலங்கையில் நவீன ஆங்கிலேயச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. என்றுர்.

## துரித ரயில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காங்கேசன் துறையிலிருந்து புறப்படும் நேரம்: காலை 5-40. யாழ்ப்பாணம் -6-00 அனுராதபுரம்- 9-00. கொழும்பு- 12-15.



''ஈழநாடு'' வெள்ளி விழா ஆண்டின் ஓர் சிறப்பு அம்சமாக, இருபத்து ஐந்து வயது ஆரம்ப தினமான கடந்த பதினோராம் திகதி, ''ஈழநாடு'' பத்திரிகையை முதலில் ஆசீர்வதித்த யோகர்சுவாமிகளின் புகைப்படம் 'ஈழநாடு' அலுவலகத்தில் வைக்கப்பட்டு அவருடைய ஆசிகள் மீண்டும் பெறப்பட்டது.

யோகர் சுவாமிகளின் ஓவியத்தை வரைந்தவர் ரி. எஸ். இலங்கைநாதன் (லங்கா). 'ஈழநாடு' பொது முகாமையாளர் திரு. து. சீனிவாசகத்திடம் அன்பளிப்புச்செய்வதை முதல் படத்திலும், 'ஈழநாடு'முன்னுள் நிர்வாக ஆசிரியர் அமரர் கே. பி ஹரனின் புகைப் படத்துக்கு 'ஈழநாடு' நிர்வாக ஆசிரியர் திரு. எஸ். சபாரத்தினம் மலர் அஞ்சலி செலுத்துவதை இரண்டாவது படத்திலும், உதவி முகாமையாளர், நிர்வாக ஆசிரியர், பொதுமுகாமையாளருடன் ஓவியர் நிற்பதை மூன்றுவது படத்திலும் காணலாம்.

படம்: 'பிரபா'

## பாதுகாப்பு அமைச்சராக மோஷே ஆன் நியமனம்

டெல்அவிவ், பெப். 14 இஸ்ரேலின் புதிய பாதுகாப்பு அமைச்சராக திரு. மோஷே ஆன் பிரதம மந்திரி திரு. மெனுச்சம் பெகினினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

பெய்ரூட் படுகொலைபற்றி விசாரணை செய்த இஸ்ரேலிய ஆணைக்குழுவின் அறிக்கையை யடுத்து இஸ்ரேலின் முன்னுள் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஏரியல் ஷெரோன் தனது அமைச்சர் பதவியை ராஜினுமாச் செய்திருந்தார்.

புதிய பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதிரு. மோஷே ஆன் அமெரிக்காவில் இஸ்ரேலின் தூதுவராகக் கடமையாற்றிவந்தார். பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஏற்க இவர் இணக்கம் தெரிவித்துள்ளார். (வெ)

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாண வெங்காயத்தை மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மேற்கொண்ட முயற்சிபற்றியும், அது பின்னர் வெங்காயக் 'கதை'யாகிவிட்டதையும் நேற்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

இதனைப் படித்துவிட்டு அரசு உயர் அதிகாரி ஒருவர் நேற்றுப் பகல் தொலைபேசியில் தொடர்புகொண்டார்.

''மத்திய கிழக்கு நாடுகளுக்கு யாழ். வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படவிருந்தது மட்டும் வெங்காயக்கதை அல்ல; காங்கேசன்துறையிலிருந்து நாகபட்டணத்துக்கு கப்பல்சேவை நடத்தப்படவிருக்கிறது என்று வெளியான செய்தியும் வெங்காயக் கதைதான்! இதனை, 'கப்பல் பார்த்த கதை' என்றும் சொல்லலாம்'' என்று அந்த உயர் அதிகாரி அங்கலாய்த்தார்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக்கு இதுசமர்ப்பணம்!

— 'ஊடுருவி'

## மரண அறிவித்தல்

### கிளிபேட் டொமினிக்

கிளிபேட் டொமினிக் அவர்கள் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற டொமினிக், தங்கரத்தினம். ஆகியோரின் அன்புப் புதல்வனும், ராணி டொமினிக் அவர்களின் அன்புக் கணவரும், ஜோய் டொமினிக் (யாழ் பல்கலைக் கழகம, ரேய் (ஜெயா ரேடேஸ் கொழும்பு), ஜொய்சி ஆசிரியை, புளியங்குளம்) ஷெரய்சி (சிங்கப்பூர்), பப்சி, றஜி (மடுத்தினர் குருமடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற றிச்சேட், பீற்றர், இமல்டா அதிபர், கொட்டாஞ்சேனை வித்தியாலயம். அருட்செல்வி மேரி எவரெஸ்ரா, ஸ்ரெலா ஆசிரியை, யாழ். கன்னியர் மடம்] ஆகியோரின் சகோதரரும், பேபி குணரட்ணம், [ஆசிரியை, பண்டாரிக்குளம்] அவர்களின் மைத்துனரும் பபா அவர்களின் மாமனுரும். டிலானி அவர்களின் பேரனுமாவார். அன்னுரின் பூதவுடல் 15-2-83 செவ்வாய்க்கிழமை பி. ப. 4-00 மணிக்கு. பரி. கொஞ் சேஞ்சிமாதாவின் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

111/3, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

6199

## மரண அறிவித்தல்

உயர்திரு.

### வே. கிருஷ்ணபிள்ளை ஜே. பி.

விவேகானந்தா அச்சகம் லிமிட் பங்காளரும் ஜலன்ட் சுருட்டுத் தொழிற்சாலை உரிமையாளரும், சமாதான நீதவானுமாகிய திரு வே கிருஷ்ணபிள்ளை காலமாகிவிட்டார் இவர் இராசமலரின் அன்புக் கணவரும், மஞ்சுளா, கண்ணன் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற முன்னுள் விவேகானந்த அச்சகம் வே. சிவலிங்கம், வே. சுந்தரம்பிள்ளை, காலஞ்சென்ற விபுலானந்தா அச்சக முதல்வர் வே. கந்தசாமி மற்றும் வே செல்வநாயகம், கொழும்பு அரசன் அச்சக உரிமையாளர் வே திருநாவுக்கரசு, வே கார்த்திகேசு ஆகியோரின் அன்புச்சகோதரரும், கொழும்பு கல்வித் திணைக்களம் சு. குமாரவேலு, சிலோன் புறுவறி லிமிட்டெட் நுவரெலியா], சு நல்லையா, மட்டக்களப்பு ஆர். ஏ எம் பி சு இரத்தினசிங்கம், திருமதி இராஜாட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார், அன்னுரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக அவரது 'சுந்தரபவனம்' கே. கே. எஸ் வீதி, கொக்குவில் இல்லத்திலிருந்து 15-2-83 செவ்வாய்க்கிழமை (இன்று) மாலை 4-00 மணியளவில் கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

6198

## சுவீப் முடிவுகள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தலா 995 ரூபா 16 சதம் ஆறுதல் பரிசு பெறும் நூறு டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 02 A 0266 | 04 A 0793 |
| 06 A 0156 | 09 A 0104 |
| 09 A 0895 | 15 A 0786 |
| 20 A 0474 | 01 B 0068 |
| 07 B 0524 | 22 B 0537 |
| 08 C 0587 | 12 C 0122 |
| 03 D 0911 | 05 D 0371 |
| 11 D 0891 | 18 D 0319 |
| 12 E 0968 | 02 F 0496 |
| 04 F 0777 | 05 F 0896 |
| 11 F 0672 | 11 F 0922 |
| 15 F 0429 | 17 F 0497 |
| 20 F 0679 | 22 F 0841 |
| 02 G 0313 | 04 G 0098 |
| 08 G 0035 | 11 G 0113 |
| 11 G 0264 | 19 G 0446 |
| 09 H 0619 | 11 H 0315 |
| 01 J 0258 | 04 J 0689 |
| 09 J 0558 | 15 J 0214 |
| 19 J 0430 | 09 K 0957 |
| 10 K 0516 | 17 K 0400 |
| 17 K 0609 | 21 K 0510 |
| 21 K 0827 | 22 K 0999 |
| 11 L 0723 | 20 L 0418 |
| 20 L 0589 | 22 L 0446 |
| 06 M 0354 | 09 M 0186 |
| 20 M 0219 | 03 N 0989 |
| 07 N 0908 | 08 N 0368 |
| 08 N 0858 | 22 N 0115 |
| 22 N 0467 | 22 N 0731 |
| 09 O 0235 | 16 O 0771 |
| 01 P 0364 | 10 P 0152 |
| 12 P 0454 | 16 P 558 |
| 18 P 0 86 | 03 Q 0942 |
| 01 R 0635 | 07 R 0068 |
| 07 R 0335 | 14 R 0067 |
| 16 R 0053 | 16 S 003 |
| 17 S 0539 | 04 T 0076 |
| 07 T 0781 | 09 T 0583 |
| 12 T 0045 | 17 T 0984 |
| 05 U 0243 | 02 U 0155 |
| 11 U 0726 | 09 V 0853 |
| 10 V 0762 | 11 V 0385 |
| 13 V 0826 | 18 V 0121 |
| 18 V 0248 | 04 W 0234 |
| 06 W 0595 | 06 X 0890 |
| 06 Y 0827 | 11 Y 0836 |
| 20 Y 0908 | 05 Z 0328 |
| 10 Z 0094 | 12 Z 0803 |
| 20 Z 0249 | 20 Z 0916 |

(இவை யாவும் உறதிப்படுத்தப்பட வேண்டும்)

## உபாலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காணுமல் போயிருக்கின்ற தென்றமுடிவுக்கு வந்துள்ளன.

ஜெட்டைத்தேடி தரிதமாக தேடுதல்கள் நடைபெறுகின்றன. இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி இரு கடற்படைப் போர்க்கப்பல்களுடன் வியானங்களை மலேஷியா, இந்தோனேஷியா தேடுதல் அணிகள் தேடுதலில் ஈடுபடுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவற்றுடன் அமெரிக்கத் தேடுதல் அணியொன்றும் சேர்ந்துகொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. உபாலி விஜேவர்த்தன அண்மைக் காலங்களிலேயே மிகவும் பிரபலம்பெற்றவராக இலங்கையில் விளங்கத் தொடங்கினுர் அரசியல் வாதிகளால் பலவேறு விதமாக விமர்சிக்கப்பட்ட இவர் வெகுவிரைவில் ஆளுங்கட்சியில் முக்கிய பதவியொன்றில் நியமிக்கப்படுவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

கோடீஸ்வரரான இவர் சர்வதேச ரீதியில் பலதேசக் கம்பனிகளின் உரிமையாளராக விளங்குகிறுர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

## கோர லொறி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

லொறியின் முன்பக்கமாக இருந்த மூவருமே மரணமாகியுள்ளனர் லொறியின் சாரதியான மயிலிட்டியைச் சேர்ந்த தேவராஜா (37 வயது), இளினர் ம்யிலிட்டியைச் சேர்ந்த ஜோசப் அன்ரன் (21 வயது) ஆகிய இருவரும் ஸ்தலத்திலேயே மரணமாகியுள்ளனர். பண்டத்தரிப்பைச் சேர்ந்த சரவணமூர்த்து (35 வயது) பலத்த காயமுற்றநிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமாகியுள்ளார்.

இரவு சுமார் 12 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ள வீதியிலுள்ள கிட்போஸ்டுடன் உராய்ந்து கொண்டுசென்று அருகிலுள்ள பாலை மரம் ஒன்றுடன் லொறி மோதப்பட்டு துண்டுகளாகச் சிதறியுள்ளது.

லொறியின் பக்கத்திலிருந்து பிரயாணம் செய்தவர்களான தெல்லிப்பழையைச் சேர்ந்த செல்வரத்தினம், சீனி ஆகிய இருவரும் காயமெதுவுமின்றி தப்பியுள்ளனர்

வவுனியா பதில் மாவட்ட நீதிபதி திரு ஆர். வி. சிவராஜா நேற்று ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டார் மரணமானவர்களின் சடலங்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று பிரேத பரிசோதனை நடத்தும்படி அவர் உத்தரவிட்டார்.

## இராதாகிருஷ்ணன்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இரா. இராதாகிருஷ்ணன் யாழ்ப்பாணம் வருகிறுர்.

பருத்தித்துறை கம்பன்கழகத்தை இன்று பேராசிரியர் ஆரம்பித்து வைப்பார் 16ம் 17ம் திகதிகளில் நடைபெறும் கம்பன்கழக விழாக்களிலும் கலந்து கொண்டுசொற்பொழிவாற்றுவார். 21ம் திகதி இணுவில் கம்பன்கழகத்தை ஆரம்பித்துவைப்பார். 22ம் திகதி நடைபெறும்விழாவிலும்அவர் கலந்து கொள்வார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office [illegible]
Q.B. 100236/81 Eelanadu - P. O. Box: 49. Telegrams: Eelanadu, Telephone: 22389 — 24126